3NNG
Kallar Branch Library

விலை ரூபா 2-00 12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர் 28 ஆவணி 22 முஹர 2 இதழ் 209
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (7—9—86)

### கோகிலான்கரை படகு மூழ்கடிப்பு:

## இறந்ததாகக் கூறப்பட்ட வெளிநாட்டவர் இந்தியாவில்!

### தீவிரவாதிகள் மூவர் உயிர்தப்பினர்

கொழும்பு, சனி

வடபகுதியில் தீவிரவாதிகளின் படகொன்றைக் கடற்படையினர் தாக்கியபோது உயிரிழந்ததாக நம்பப்பட்ட வெளிநாட்டவர் இந்தியாவில் இருப்பதாகவும், மூன்று தீவிரவாதிகள் தப்பியுள்ளதாகவும் மற்றும் மூன்று தீவிரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகின்றது

நோர்வே நாட்டைச் சேர்ந்த இவர், தான் ரஷ்யாவிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றின் நிருபர் என்று கூறியுள்ளார். இவர் இலங்கையின் வடபகுதிக்குத் தன்னை அழைத்துச் செல்லுமாறு தீவிரவாதிகளைத் தான் கேட்டதாக பி. ரி. ஐக்குத் தெரிவித்துள்ளார்.

தீவிரவாதிகளுடன் சென்றஇவர் (12-ம்பக்கம்பார்க்க)

★ "இலங்கை ஜனதிபதி அளித்த வாக்குறுதிகளை செயற்படுத்தத் தவறிவிட்டார்"

★ "சகஜ நிலை ஏற்படாதவரை அகதிகள் நாடு திரும்பமுடியாது"

# "எமது உதவி வேண்டாமெனில் விலகிக்கொள்ள நாம் தயார்"

## "போராளிகள் முகாம்களைக் காட்டினால் மூடிவிடுவோம்" -ராஜீவ்

ஹராரே, செப் 6

இனப்பிரச்னைக்கு தீர்வுகாணும் விடயத்தில் இந்தியாவின் உதவி தமக்கு அவசியமில்லையென இலங்கை அரசு எண்ணுமாகில் இது விடயத்தில் தமது மத்தியஸ்தத்தை முற்றுமுழுதாக விலக்கிக்கொள்ளத் தாம் தயாராக இருப்பதாக இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.



ஹராரேயில் இன்று இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றின்போது இலங்கை நிருபர் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே திரு. ராஜீவ் காந்தி இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து பிரதமர் திரு. ராஜீவ் தெரிவிக்கையில்:

கொழும்பில் நடைபெற்ற சர்வகட்சி மகாநாட்டில் சமர்ப்பிக்கப்படவிருந்த மகஜரில் வரையறுக்கப்பட்ட விடயங்கள் அனைத்தையும் இலங்கை ஜனதிபதி ஜயவர்த்தன அமுல் செய்வதற்கு சம்மதித்திருந்தார் அவ்வாறு சம்மதந் தெரிவித்தவர் ஒன்றரை வருடங்களாகியும் அவைகளை நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டார் எனக்குற்றம்சாட்டினர்

சென்ற வருடத்தில் புதுடில்லியில் தம்மைச் சந்தித்த ஜனதிபதி ஜயவர்த்தன இனப்பிரச்னை தீர்வுக்கான உதவிகளை வழங்குமாறு கோரினரெனக் கூறிய ராஜீவ் காந்தி தாம் அளித்த வாக்குறுதிகளைக்காப்பாற்ற அவர் தவறிவிட்டாரெனவும் கூறினர்.

தமிழ்ப் போராளிகளுக்கு முன்னர் அளித்திருந்த வாக்குறுதிகளை இலங்கை அரசு முற்றுக மீறிவிட்டதாகக் குற்றஞ்

(11ம் பக்கம் பார்க்க)

## "தமிழீழ தபால் சேவை" வாகனத்தின் சுறுசுறுப்பு

யாழ்ப்பாணம் ஞாயிறு

'தமிழீழம் தபால் சேவை' என எழுதப்பட்ட வாகனம் யாழ்ப்பாணத்தில் சுறுசுறுப்புடன் இயங்கி தபால் சேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டதைக் காணமுடிந்தது.

யாழ்ப்பாணத்திலுள்ள இருபதுஇடங்களில்தமிழ் ஈழம் முத்திரைகள் விற்பனை செய்யப்படுகின்றன. பொது மக்கள் இம் முத்திரை விற்பனை செய்புமிடங்களுக்குச்

(12ம் பக்கம் பார்க்க)

## மினி சினிமா ஆபாச விளம்பரம் அகற்றப்பட்டது

### மீண்டும் ஒட்டினல் கடும் நடவடிக்கை —ஈ பி ஆர் எல் எவ்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ் மாநகரசபைப்பகுதிக்குள் காணப்பட்ட ஆங்கிலப் படங்களுக்கான ஆபாசக் காட்சி விளம்பரங்களை ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நேற்று அகற்றியது.

யாழ் மாநகரசபைப்பகுதிக்குள், மினிசினிமா விளம்பரங்களில் ஆபாசமான விளம்பரங்கள் தடைசெய்யப்பட்டுள்ளதென முன்பு அறிவிக்கப்பட்டிருந்தும், இதுவரை அவைகள் அகற்றப்படமால் இருந்தன.

நேற்று அவற்றை அகற்றிய ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, மீண்டும் இவ்வாறன ஆபாசக்காட்சி விளம்பரங்கள் ஒட்டப்படுமானல் கடும் நடவடிக்கை எடுக்கப் படுமென மினிசினிமா காட்சியாளர்களை எச்சரித்துள்ளனர்.

## பலாலி விமான நிலையத்துக்கருகில் இருந்த பொலிஸ் பிரிவு மூடப்பட்டது யாழ். கோட்டையில் செயல்படும்

மாவிட்டபுரம், சனி

பலாலி விமான நிலையத்திற்கு அண்மையில் அமைக்கப்பட்டிருந்த பொலிஸ் பிரிவு நேற்று முதல் மூடப்பட்டு அங்கு கடமையாற்றிய 6 பொலிசாரையும் யாழ். கோட்டையில் அமைந்துள்ள காங்கேசன்துறை பொலிஸ் பிரிவில் கடமை புரியுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

பலாலி விமான நிலையத்திற்கு அண்மையில் படையினரின் முகாம் பகுதியில் ஜூலை முதலாம் திகதி தொடக்கம்

(11-ம் பக்கம் பார்க்க)

## ஜெட் விமான கடத்தலை பாக். கமாண்டோக்கள் முறியடிப்பு

இஸ்லாமாபாத் செப் 6

கராச்சி விமான நிலையத்தில் நான்கு அரேபிய ஆயுதபாணிகளால் கடத்தப்பட்ட ஜம்போ ஜெட் விமானத்தை மீட்பதற்கு பாகிஸ்தான் கொமாண்டோ படைவீரர்கள் முற்றுகையிட்டபோது கடத்தல்காரர் ஒருவர் கொல்லப்பட்டார். மற்ற மூவரும் கைதுசெய்யப்பட்டார்கள்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இம்முற்றுகையின்போது விமானத்தில் இருந்த 18பேர்கொல்லப்பட்டதாகவும் நூற்றுக்கதிகமானோர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடத்தல்காரர்கள் விதித்த காலக்கெடு முடிவடைவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னரே இம்முற்றுகை இடம் பெற்றது இது இவ்வாறிருக்க பாகிஸ்தான் ஜனதிபதி ஷியாவுல் ஹக் விமானக் கடத்தல்காரர்களுக்கு பாகிஸ்

(12-ம் பக்கம் பார்க்க

# "தமிழ்ப் போராளிகளுடனை போரில் அரச படைகள் வெற்றிகொள்ளமுடியாது"

### தப்பிச்சென்ற சிப்பாய்கள் புலிகளுக்குப் பேட்டி

யாழ்ப்பாணம் ஞாயிறு

'தமிழர்களுக் கெதிராகச் சண்டை செய்யும் நோக்கம் எமக்கில்லை. தமிழ்ப்போராளிகளுடனை போரில் அரச படையினர்வெற்றிகொள்ள முடியாது, என ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து தப்பச்சென்ற இரு இராணுவ சிப்பாய்களும் தமிழீழ விடுதலைப்புலிகளின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

அவர்கள் மேலும் கூறுகையில் வடபகுதியிலுள்ள இராணுவ முகாம்களில் கடமையாற்றும் சிப்பாய்களுக்குப் போதிய உணவு வழங்கப்படுவதில்லை, போதுமான சம்பளம் கிடையாது, பத்திரிகைகள் வாசிப்பதற்கு அனுமதியில்லை. வீடுகளுக்குச்செல்ல லீவுவழங்கப்படுவதில்லை எனக் கூறியவர்கள் தம்மைப் போல் பல சிப்பாய்கள் ஏற்கெனவே தப்பிச்சென்றுள்ளதாகவும் கூறினர்.

(12-ம் பக்கம் பார்க்க)

# அசி விளம்பரம்

## விற்பனைக்கு

மைசூர் அரிசி நம்பர்-1 கல்லில்லாதது, சுத்தமானது, தரமானது, சுவையானதும்கூட. கைதேர்ந்த தொழிலாளர்களால் இயந்திரமூலம் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சகலதேவைகளுக்கும் எங்கும் கிடைக்கும் மைசூர் அரிசியையே கேட்டு வாங்குங்கள். ஒருமுறை பாவித்தால் உண்மை விளங்கும். தயாரிப்பாளர்-மைசூர் அரிசி ஆலை, மானிப்பாய். C 4200

நீர்வேலி கந்தசாமி கோவிலுக்கருகில் மிகுந்த பாதுகாப்பான சூழலில் சகல வசதிகளுடனும் கூடிய இரண்டு பரப்புக்காணியும், வீடும் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: நீர்வேலி பண்டிதர் நீ சி. முருகேசு அவர்களுடன் தொடர்பு கொள்ளவும். [C 4420]

சாவகச்சேரி ஆஸ்பத்திரி வீதியில் 2 பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு:- என். பத்மநாதன், 'நாதன் இல்லம்'. கந்தையாவீதி, சாவகச்சேரி, தொலைபேசி இல: 2 1 2. (C 4368)

Sony- 20''-2032- II Telifuncon T V 22'' TosepaT.V 20- B/W S. T. L வீடியோகிளப், No 3, நவீன சந்தை மேல்மாடி, திருநெல்வேலிச்சந்தி. [C-4457]

நல்ல நிலையிலுள்ள புதிய சொனி, கலர் T V. 20'' விற்பனைக்குண்டு. கி கிறிஸ்தோபர், மாதா கோவிலடிறோட், உயரப்புலம், ஆனைக் கோட்டை. (C4473)

சேவற் ஞ்சுகளுக்கு பதிவு செய்தவர்கள் 9ம் திகதி, 10ம் திகதி, 16ம் திகதிகளில் தவறாது பெற்றுக் கொள்ளவும். சற்குணராஜா பிறதர்ஸ், பிரம்படி, கொக்குவில் (C 4471)

(1) Ford Consul EN நல்ல நிலையில் (2) தட்டச்சு யந்திரம் Remington portale (3) Two in one National Panasonic. ஸ்ரீநிவாசன், மருதனமடம். [C 4445]

Sharp 20'' வெள்ளை கறுப்பு நிற T.V, Booster with Antena, அக்காய் ஸ்பூல் டெக், அக்காய், பைனியர் ரெக்கோட் பிளேயர்ஸ், 4 சோடி பைனியர் ஒளிபரப்பு பெட்டிகள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: செந்தில், மருதனமடம் சந்தி, சுன்னாகம். (C 4451)

நவீன வீட்டுத் தளபாடங்கள் செற்றி, அல்மாரி, புத்தக அல்மாரிகள், Book Self, கசற் றேடியோ, எலக்ரோனிக் Organ. Rytham with 2 in one, வயலின், Hair Dryer, கிளாஸ் வகைகள், சாப்பாட்டு மேசைகள், Showcase, Dressing Table, Maulinex Mixer, National Oven, Ladies Bike Iron Usha எலக்ரிக் தையல் மெஷின், மெத்தைகள், பிளாஸ்ரிக் கதிரைகள் மற்றும்பல உடன்விற்பனைக்கு. M. Thiagarajan, 326, பிரதான வீதி, யாழ்ப்பாணம், St. சாள்ஸ் பாடசாலையருகில். [C 4458]

## தேவை

சுன்னாகம் வர்த்தக நிலையம் ஒன்றிற்கு ஆங்கிலம், ஆங்கில தட்டச்சுநன்குதெரிந்த லிகிதர் (Clerk) உடனேதேவை. ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விளம்பர இல. 4475 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 4475)

மூன்று அறைகளுடன் எல்லா வசதிகளும் கொண்ட வீடும் அதற்கு அண்மையில் நடனவகுப்புக்கள் நடாத்தஒரு Hall ம் உடனடியாகத் தேவை. திருமதி திரு. யோகானந்தம், 294, கண்டி வீதி, யாழ்ப்பாணம். (C-4442)

லொறி பொடி அடிக்கும் அனுபவம் மிக்கவர்கள் மட்டக்களப்பில் உள்ள பிரபல கராச்சுக்கு உடனடியாகத் தேவை தகுதியானவர்கள் விண்ணப்பிக்கவும். 12, நேச ஒழுங்கை, மட்டக்களப்பு [C 4342]

காசாளர் (Cashier) தேவை. ஆண் / பெண் இருபாலாரும் 10-9-86 முன் விண்ணப்பிக்கவும். மெடிக்கல் ஹோல், No. 224, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C 4470)

பிரதான வீதியில் அல்லது அருகாமையில் கடையும் ஒரு வீடும் வாடகைக்கு அல்லது குத்தகைக்குதேவை. யோசப், 13 25), மாட்டீன் லேன், யாழ்ப்பாணம். (C4472)

மொரட்டுவ பாணியில் வீட்டுத் தளபாடங்கள் செய்வதற்கு தச்சு வேலையாட்கள் தேவை. இயந்திர உதவிகள் உண்டு. 9ம திகதிக்குமுன் தேவை. நேரில்வரவும். ஸ்ரான்லி பேணிச்சர் பலஸ், 527, ஸ்ரேசன் ரோட், யாழ்ப்பாணம். (C 4469)

## வகுப்புகள்

கரவெட்டி மொடேன் எடியுகேசன் சென்ரறில் க. பொ. த. [உயர்] 87-ம் ஆண்டு பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கு கலை / வர்த்தக / விஞ்ஞான வகுப்புக்கள் நடைபெறுகின்றன. [C-4412]

Spoken English, பகல்நேர புதிய வகுப்பு. திங்கள், புதன், வெள்ளி நாட்களில். காலை 9-10 மணிவரை. ஆரம்பம்: 10-09-86. S. P.I yar, 12, வைமன் வீதி, நல்லூர். [C 4402]

108, Brown Road, Jaffna A/L 87 இரசாயனம் ஆசிரியர் - சத்திஸ், ஆரம்பம்: 13-09-86 சனி 3-30 p m. வகுப்பு நேரங்கள்: சனி, ஞாயிறு 2-30 p. m- 3-30 p.m and 3-30 p. m. - 4 30 p.m [C-4404]

## சேவை

இதோ எம்மிடம் எல்லாச் சாதி சமயத்திலும் டொக்டர் எஞ்சினியர், எக்கவுண்டன்ற் ஆசிரியர் சிறு தொழில் புரிவோர் ஆண், பெண் மணமக்கள் இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். C 4224

உங்கள் உபயோகித்த வீட்டுத்தளபாடங்கள் மற்றும் பொருள்களை விற்பனை செய்ய இருப்பின் உடன் தொடர்பு கொள்ளவும். M Thiagarajan, 326, Main Street, J ffna. (C 4459]

தரமான, தெளிவானபோட்டோஸ்டட் (Photostat) பிரதிகளுக்கு கிவீ போட்டோ, 38, சப்பல்வீதி, [2ம் குறுக்குத் தெருச் சந்திக்கும், 3ம் குறுக்குத்தெருச் சந்திக்கும் இடையில்] இரவு பகல் 24 மணிநேர சேவை. (C 4461)

## மணப்பந்தல்

யாழ்ப்பாண இந்துவேளாள செவ்வாய் குற்றமுள்ள மணப்பெண்ணுக்கு 36ற்கும் — 44 வயதுக்கிடைப்பட்ட பண்புள்ள மணமகன்தேவை. தாரமிழந்தோரும், விவாகரத்தானோரும் விண்ணப்பிக்கலாம். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (C 4465)

அரசாங்க பாடசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியையாக கடமையாற்றுபவரும் 29 வயதுடையவரும 4 ல் செவ்வாய் உள்ள அழகிய பெண்ணுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகிறார்கள். சீதனமாக நல்லூர் கோயிலுக்கு அண்மையில் வீடும், நகையும், பணமும் கொடுக்கப்படும. விளம்பர இல: C 4409, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 4409]

பச்சிலைப்பள்ளி
ப.நோ.கூ. சங்கம் பளை.

### வெற்றுச்சாக்கு கேள்வி விண்ணப்பம்

பச்சிலைப்பள்ளி ப.நோ கூ. சங்கத்தில் 5000 வெற்றுச் சாக்குகள் விற்பனைக்குண்டு கேள்விப் படிவங்கள் ரூபா 100/- மீளப்பெறும் வைப்பாகச் செலுத்தி சங்க அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். ஏற்னவே செலுத்தியோர் இம்முறை செலுத்த வேண்டியதில்லை. வெற்றுச் சாக்குகளை சங்க அலுவலக நேரங்களில்பார்வையிடலாம். விண்ணப்பங்கள் யாவும் 20-9-86க்கு முன்முத்திரையிடப்பட்ட பதிவுத் தபால்மூலம் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். தபால்உறையின் இடது பக்க மேல்மூலையில் ''வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்பம்'' எனக்குறிப்பிடுதல்வேண்டும்.

பொதுமுகாமையாளர்,
பச்சிலைப்பள்ளி ப.நோ கூ.
சங்கம், பளை.

5 - 9 - 86. (A 1243)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# இவ் அழைப்பிதழ் உங்கள் ஒவ்வொருவருக்கும் உரித்தாகுக

என் அன்புசால் வாடிக்கையாளர்களே! நண்பர்களே! அபிமானிகளே! இன்று பனை அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் யாழ் பீச் இன் ஆதரவில் நடைபெறும் பனம்பொருள்உணவுகள் அறிமுக விழாவும் விற்பனையும் காலை 10-30 மணியளவில் யாழ். பீச் இன் 139, கடற்கரை வீதியில் அமைந்திருக்கும் உணவகத்தில் யாழ். மறைமாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய கலாநிதி வ தியோகுப்பிள்ளை அவர்கள் தலைமையில் பல பிரமுகர்கள் மத்தியில் நடைபெறும். அத்தருணம் எமது மக்களாகிய உங்களை எமது விழாவில் பங்குகொள்ள வருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
உங்கள் இதயத்தில் இருக்கும்
**ஜோ. எகட்டன்**
அமைப்பாளர்.

நிகழ்ச்சிநிரல்

10-45—மங்கள விளக்கேற்றல்
11-00—வரவேற்புரை
11-15—பிரதம அதிதியின் உரை
11-45—பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் தலைவர் உரை
12-00—யாழ் பீச் இன் உரிமையாளர் உரை
12-10—நிகழ்ச்சி தயாரிப்பாளரின் நன்றியுரை பனம்பொருள்பற்றிய விளக்கவுரை-விற்பனை ஆரம்பம்
1-00—தொடர்ந்து மதிய விருந்து [விருந்து அழைப்பிதழ் உள்ளவருக்கு]
2-15—கடைசியாக:
உள்ளூர் மேடைப் பாடகர்கள், பாடகிகள் கலந்துகொள்ளும்
''இன்பச்சோலையில்'' அருணுவின் மதுர கானம்.
மணிக்குரல்—கவர்ச்சிக் குரலோன்
மேஜர் ஷண்+லோகேஸ்- ஜோ. எகட்டன்?

இது ஒரு செனித் fபிலிம் fபெயர் தயாரிப்பு- ZENITH ADS.
(A 1244)

# ஜேர்மனியில் திருமணம்

06-09-86 சனிக்கிழமை பி.ப. 4மணியளவிலுள்ள சுபமுகூர்த்த வேளையில் திருமணம் நடைபெற்றது.



| மணமகன்: | மணமகள்: |
|---|---|
| T. கிறிஸ்ணதாஸ் | சிறீசசி |
| திரு. திருமதி S. தங்கராஜா குடும்பத்தினர் | திரு திருமதி சிவனடியார் குடும்பத்தினர் |

நண்பர்கள், உறவினர்கள், நலன் விரும்பிகள் யாவர்க்கும் அறியத்தருகிறோம்.

மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழை.

[A.1241]

# அறிவெனும் செல்வம் அனைவர்க்கும் வேண்டும்

அறிவைப் பெறுவதற்கும், அறிவைவளர்ப்பதற்கும், ஆற்றல்களை விருத்தியடையச் செய்வதற்கும், அதன் விளைவாக, உடல், உள்ளம், ஆத்மீகம் ஆகியன வளர்ச்சியடைந்து நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் முன்னேற்றத்திற்கு பல துறைகளிலும் கடமையுணர்ச்சியுடனும், கட்டுப்பாடாகவும் உதவக் கூடிய முறையில் வழிவகுப்பது கல்வியாகும். சமுதாயம் சீரான முறையில் வளர்ச்சியடைய ஒழுங்கானமுறையிலும் பயனைத் தரக்கூடிய முறையிலும் கல்வியூட்டப்படல் வேண்டும.

## கல்வி வாய்ப்புஇன்மை

ஆசைகளைக் கட்டுப்படுத்தி மனிதாபிமானத்தை வளர்த்து பரந்தநோக்குடன் தனக்குதவியாகவும், பிறருக்கு வேண்டிய நேரங்களில் உதவியளிக்கவும் சமயக்கல்வி வழி வகுக்கின்றது. ஆனல் சகல நாடுகளிலும் வாழ்பவர் அனைவரும் கல்வியைப் பெறக்கூடிய முறையில் இல்லை. இதற்குப் பலகாரணங்களுண்டு பெற்றோரின்வறுமை, அறியாமை, குடும்பத்தில் அங்கத்தவர் தொகை கூடியிருத்தல், வசதிக்குறைவுகள், பள்ளிக் கூடங்கள் அண்மையிலில்லாமை, ஆசிரியர் பற்றுக் குறைவு ஆகியனவாகும்.

## விழிப்புணர்ச்சி வைபவம்

நாட்டின் அரசியல் அமைப்பிலும், பொருளாதார நிலையிலும் கல்வியின் வளர்ச்சிதங்கியுள்ளது. தென்கிழக்கு ஆசிய நாடுகளை எடுத்து ஆராயுமிடத்து எழுத்தறிவில்லாதோர் தொகைமிகக்குறைவான நாடுகளில் முதலிடத்தை வகிப்பது யப்பான் தேசமாகும், இரண்டாவதாகவுள்ளது எமது இலங்கையாகும். ஏனைய நாடுகளில் எழுத, வாசிக்கத்தெரியாதோர் தொகை மிகக்கூடவாகவுள்ளது இலங்கையில் 13வீதமானோர்எழுத்தறிவில்லா தோராகவுள்ளனர். இத் தொகையைக் குறைப்பதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாத காரணத்தினல் 1967ம் ஆண்டு செபடம்பர் மாதம் 8ம் திகதி உலக அறிவூட்டல் தினமாக பிரகடனம் செய்யப்பட்டு ஒவ்வோர் ஆண்டு தோறும், அறிவைப் பெறமுடியாத பிள்ளைகள், கற்றறியாத மக்கள் ஆகியவர்களின் பிரச்னையை ஆராய்ந்து அவற்றை படிப்படியாகக் குறைப்பதற்கும், தடுப்பதற்கும் உரியவழிகளை உணர்ந்து செயற்படுத்த ஆவன செய்யும் பொருட்டு, மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தக் கூடிய நிகழ்ச்சிகளைக் கொண்ட வைபவமாக இத் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.

## அறிவூட்டல்

கல்வித்திணைக்களம் இரவு வகுப்புகளை ஏற்படுத்தி முதியோர்களுக்கு பாடசாலை அதிபர்களுடைய உதவியுடன், அறிவூட்டல் கல்வியை அளித்து வந்தது. அதேநேரத்தில் விவசாய அலுவலகங்களும், கமத்தொழில் கல்வி நிலையங்களை ஏற்படுத்தி, விஞ்ஞான ரீதியான விவசாயச் செய்கை முறைகளை போதித்து வருகின்றது கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமும், கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி பல துறைகளில் பயிற்சியளித்துக் கொண்டு வருகின்றது அதேபோன்று சிறுகைத் தொழில் திணைக்களம், கிராமஅபிவிருத்திதிணைக்களம், சுகாதார திணைக்களம் ஆகியன அவ்வத் துறையில் போதிய பயிற்சியையும் அளித்து அறிவைப் பெருக்க உதவியளித்துக் கொண்டு வருகின்றன சமூக சேவைச் சங்கங்களும், சமய சங்கங்களும், போதியளவு திட்டங்களை வகுத்து செயற்பாட்டிலீடுபட்டுள்ளன.

## இலங்கையில் --

இலங்கையைப் பொறுத்தளவில், மக்களின் பிரதிநிதிகள் உள்நாட்டு நிர்வாகங்களில் பொறுப்பெடுக்கத் தொடங்கிய ஏறத்தாள ஐம்பது ஆண்டுகளாக, பாடசாலைக்குச் செல்லாதவர்களுக்கும், பாடசாலையிற் சேர்ந்து இடையில் நிறுத்தியவர்களுக்கும் அவர்களுடைய தேவைகளையும், கைத்துறன்களையும் அடிப்படையாகக் கொண்டு, அறிவூட்டல் செயற்பாடாக பட்டு வருகின்றது. ஆனல், சேவைமனப்பான்மையுள்ள. அரசசார்பற்ற சங்கங்களும், சமய அறிவுக்குழுக்களும் கூடிய அக்கறை எடுத்து வசதியான இடங்களிலும், விரும்பியநேரங்களிலும் இவர்களுக்குப் போதித்து வருகின்றன.

## பயன் தரும் நிகழ்ச்சிகள்

இலவசக்கல்வித் திட்டம் 1945ம் ஆண்டில உருவடுத்த காரணத்தினல், கற்றறியாதோர் தொகை வருடம் வருடம் குறைந்து கொண்டே வருகிறது. ஆனல் யாழ்ப்பாணத்தில் 3883 ஆண்களும் 6327 பெண்களும் எழுத வாசிக்கத் தெரியாத நிலையிலுள்ளனர் ஐந்து வயதுக் குட்பட்ட பிள்ளைகளின் தொகையும் 95003 ஆகவுள்ளது எனவே இத் தினத்தில், கற்றறியாதவர்களின் தொகையைக் குறைப்பதற்குரிய, பொதுமக்கள் உணாக்கூடிய நிகழ்ச்சிகளை ஏற்படுத்தி மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோரும் பங்குபற்றக்கூடிய முறையில் கொண்டாடுதல் சாலவும் சிறந்ததாகும்

வியாசப்போட்டிகள், பேச்சுப்போட்டிகள், நாடகப் போட்டிகளை ஏற்படுத்துதல் மொழியின் முக்கியத்துவத்தை விளக்குதல் சமயக்கல்வியின் நோக்கத்தை விபரித்தல் அறிவில்லாதகாரணத்தால் ஏற்படும் பிரச்னைகளை விளக்குதல் என்பன பயன் தரும்.

## செயற்பாடுகள்

மாணவதலைவர்கள், சாரணத் தலைவர்கள், சேவைச்சங்கத் தலைவர்கள், தங்கள் பகுதிகளிலுள்ள கையெழுத்து எழுதத் தெரியாதவர்களுக்கு எழுதக் கற்பித்தல் 16 வயதுக்குட்பட்ட 6 வயதுக்கு மேற்பட்ட பாடசாலைக்குச்செல்லாத பிள்ளைகளின் விபரங்களைச் சேகரித்தல் பாடசாலைக்கு ஒழுங்காகச் செல்லாதபிள்ளைகளின் காரணங்களை ஆராய்தல், முதலாம் ஆண்டு தொடக்கம் 10ம் ஆண்டு வரையிலுள்ள மாணவர்களால் இடையில் குழம்பிய மாணவர்களின் பட்டியல் தயாரித்தல் பயன் தரும்.

கல்வித் திணைக்களத்தின் உதவியுடனும் சேவைச்சங்கங்களின் உதவியுடனும், பாடசாலைக்குச்செல்லும் வயதில், செல்லாதிருத்தலுக்குரிய காரணங்களை முற்றாக அறிந்து, வழிவகுக்கக்கூடிய சூழ்நிலையை ஏறபடுத்தலாம். யூனிசெவ், உலக சுகாதார ஸ்தாபனம் போன்றவை போதியளவு உதவி அளித்து வருகின்றன. திட்டமிடல் அமைச்சின் கீழ் இயங்கி வரும் சர்வதேச சிறுவர் ஆண்டு காரியாலயம் பல திட்டங்களை வகுத்து செயற்பாட்டிலீடுபட்டு வருகின்றது.

### ★ நாளை சர்வதேச அறிவூட்டல் தினம் ★

**சீ. எஸ். சுப்பிரமணியம்**
(வளர்ந்தோர் கல்வி அதிகாரி)

## ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ். கலை இலக்கிய நண்பர்கள் ஒன்றியத்தில் அறிஞர் கலைஞர் ஒன்றுகூடல் நிகழ்வொன்று எதிர்வரும் புதன் கிழமை மாலை, நல்லூர் இந்து விடுதியில் நடைபெறவுள்ளது

எழுத்தாளர் ''வரதர்'' தலைமையில் நடைபெறவிருக்கும் இந் நிகழ்ச்சியின்போது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயருக்கு கௌரவமும், தேனீர் விருந்தும அளிக்கப்படும். சிறப்புரைகளை யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் சு. வித்தியானந்தன், கலாநிதி பாலசுந்தரம் டொமினிக்ஜீவா, செங்கையாழியான் கோகிலா மகேந்திரன், உட்படப்பலர் நிகழ்த்துவர்.

(கை - வா)

## இந்தியாவுக்கு குடிபெயர்ந்தோர் விபரம்

சென்னை. செப், 6.

இலங்கை - இந்திய அரசு உடன்படிக்கை மூலம் இந்தியாவுக்கு குடிபெயர வேண்டிய ஐந்து லட்சத்து நாலாயிரம் பேரில் இதுவரை நான்கு லட்சத்து எண்பத்தொன்பதாயிரத்து நானூற்றி முப்பத்திமூன்று பேர் இந்தியா வந்தடைந்துள்ளனர்.

மதுரையில் நேற்று பத்திரிகையாளர் மத்தியில் பேசிய மாநில மறு வாழ்வுத்துறை இயக்குநர் திரு. பழனிசாமி மேற்படி தகவலை வெளியிட்டார்

இவர்கள் நப்பர், தேயிலை தோட்டங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

[எ]

# ஆறறிவு மனிதனுக்கு உதவும் ஐந்தறிவு நாய்கள்

**நாய்** ஒரு நன்றியுள்ள மிருகம் என்பது அனைவரும் அறிந்ததே. அதன் நன்றியுள்ள தன்மை நாய் வளர்ப்போருக்கே புரியும்

ஆனல் யப்பானில் 'சேர்வ்' (Serve) என்றவழிகாட்டி நய் (Eye dog) கண்தெரியாத எஜமானருக்காக தன்னையே இழக்கத்துணிந்ததுபற்றி, ஒரு கதாநாயகன் ஸ்தானத்தில் வைத்து மக்களனைவராலும் அன்புடன் நேசிக்கப்படுகிறது.

82-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ஒரு அதிகாலை ......

பனிபடர்ந்த அந்நேரத்தில் 'சேர்வ்' கண்தெரியாத தனது எஜமானர் திரு. கமேயாமாவை கிஃபூ மாகாணத்தின் நெடுஞ்சாலை வழியே வழிகாட்டி அழைத்துச் செல்கிறது.

திடீரென ஒரு கார் வேகத்துடன் அவர்களை நோக்கி வருகிறது. தன் எஜமானரின் வலப்பக்கத்தில் இருந்த 'சேர்வ்' அவரைக் காப்பாற்றுவதற்காக இடப்பக்கமாக பாய்கிறது.

இத் திடீர் மாற்றத்தினல் கமேயாமா நிலைதடுமாறி பின்புறமாக சாய்ந்தபோது 'சேர்வ்' காரை நோக்கிப் பாய்ந்தது. நாயின் இந்தச் செயலினல்...

திரு. கமேயாமா சிறுகாயங்களுடன் தப்பித்துக் கொண்டார்.

ஆனல் நாயோ......

காருடன் மோதிய 'சேர்வ்' சுமார் 9 யார் தூரம் தூக்கி எறியப்பட்டதுடன் அதன் இடது முன்கால் தசைகளும் நரம்புகளும் கிழித்தெறியப் பட்டன.

இதனல்...

நாயின் இடதுகால் துண்டிக்கப்படவேண்டியதாயிற்று

பின்னர் நடைபெற்ற விசாரணைகளின்போது திரு. கமேயாமா நடுவீதியில் காணப்பட்டதாகவும், அவர் வைத்திருந்த வெண்பிரம்பு பனியில் தெரியவில்லையெனவும் அந்த கார் சாரதி வாதாடினர்.

ஆயினும் நகோயா நகரின் 'வழிகாட்டி நாய்களின் சங்கத்தின்' அனுசரணையுடன் இவ்விபத்து மீண்டும் நகலாக நடிக்கப்பட்டபோது, வீதியினோரத்திலுள்ள வெள்ளைக் கோட்டினுள் போயே நய் தனது எஜமானரை வைத்திருக்கும் என்பது புலனகியது. இக்கருத்துடன் ஏனைய சாட்சியங்களும், விபத்துக்கு கார்ச் சாரதியே பொறுப்பானவர் என்பதைத் தெளிவாக்கியது.

இன்று...

இன்னெரு செயற்கைக்கால் பொருத்தப்பட்ட நிலையில் 'சேர்வ்' ஜப்பானில் சிறுவர்களினல்மிகவும் விரும்பப்படும் ஒரு பிராணியாய் மாறியுள்ளது. 'சேர்வ்' பற்றிய கதைகமொன்று, ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு ஒரு மேலதிக பாடப்புத்தகமாக வக்கப் படவுள்ளது. அத்துடன் நகோயாவின் கேந்திரஸ்தானமொன்றின் முன் 'சேர்வ்' நினைவாக சிலையொன்றும் நிறுவப்படவுள்ளது

ஜூலை 85 இல் அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநில ஆளுநர் 'டெக்ஸாஸின் கௌரவ நாய் (பிரஜை)' என்ற சான்றிதழை 'சேர்வ்'வுக்கு வழங்கினர்.

## ஜப்பானில் நெஞ்சை உருக்கும் சம்பவங்கள்


ஜப்பானின் இன்னெரு கதாநாயகன் ஹச்சிக்கோ எனும் நாயாகும்.

வெளியூர் போயிருந்த தனது எஜமானுக்காக தினமும் ரயில் நிலையத்தில் காத்திருக்கும் 'ஹச்சிக்கோ'!

தனது எஜமானர் இறந்து போய் பல வருடங்களுக்குப் பின்னரும் இந்த நாய் தனது 'கடமையை' செய்துகொண்டு தானிருந்தது.

'ஜப்பான் நியூஸ்' இலிருந்து

செந்தில்



இமயஜோதி சுவாமி சிவானந்தர்
100-வது ஆண்டு விழா
நாளை 8-9-86

உன்னைத் திருத்திக்கொள் சமூகம் தானகவே திருந்திவிடும்.

— சுவாமி சிவானந்தர்

10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 மில்க்வைற் பார்சோப் மேலுறைகளைக் கொடுத்து சுவாமி சிவானந்தர் ஸ்ரிக்கர் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற்-யாழ்ப்பாணம்.**

(A-1311)

# பேரழிவிலிருந்து நாட்டைக் காப்பாற்றும் வழி

ஒன்றிற்கு மேலான இனங்கள் வதியும் உலகிலுள்ள ஏறக்குறைய ஒவ்வொரு நாட்டிலும் சமஷ்டி அல்லது மொழிவழி மாநில சுயாட்சி முறையே நிலவுகின்றது என்பதை இன்று சாதாரண அரசியல் ஞானம் படைத்த எவருமே ஒத்துக் கொள்வர். ஏனெனில் அவ்வித நாட்டில் ஒற்றையாட்சி முறை சகல இனத்தவர்கட்கும் சம சந்தர்ப்பம் அளிப்பது சாத்தியமல்லாத ஒன்றாகும்.

## பண்டா-செல்வா ஒப்பந்தம்

இவற்றை நன்குணர்ந்த அமரர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க, முன்னோடியான ஓர் ஒளடதமாக, இனங்களுக்குள் சமரசத்தை ஏற்படுத்தும் நோக்குடன், தமிழ்த் தலைவர்களுடன் சேர்ந்து ஆராய்ந்து. பிரதேச ஆட்சி முறைத் திட்டத்தை பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் வரைந்துள்ளார். கண்டி யாத்திரை என்ற சரித்திரம் வாய்ந்த சம்பவத்தால் இத்திட்டத்திற்கு நேர்ந்த கதியும் அதைத் தொடர்ந்த பயங்கர சம்பவங்களும் இலங்கை மக்கள் மனதில் பசுமரத்தாணி போல் இருக்குமன்றோ!

குறித்த ஒப்பந்தம் சமஷ்டி முறைக்கும் அப்பால் மாநில சுயாட்சிக்கும் வித்திட்டுள்ளதென்றால் அது மிகையாகாது. மேலும் இத் திட்டம் தற்போது கௌரவ ஜனாதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாகாண சபையிலும் பார்க்க எத்தனையோ மடங்கு தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய பரந்த அளவில் மேலான அம்சங்களை உடையதாகுமென்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாதவொன்றாகும். இதற்குச்சிகரம் வைத்தாற் போன்று சான்றாக அமைச்சர் குழாமைச் சேர்ந்த கௌரவ செல்ரன் றனராஜாவின்பின் கண்ட பேச்சு அமைகின்றது.

"பண்டா -செல்வா ஒப்பந்தத்தை நிராகரிப்பதற்கு எவர் காரணமாயிருந்தாரோ அவர் சரித்திரத்தில் என்றும் நிகழாத பாரதூரமான விளைவுகளுக்கும் பேரழிவுகளுக்கும் காரணகர்த்தா ஆவார்."

## முன்னுக்குப்பின் முரண்பாடு

இதே பாணியில் திரு அநுரா பண்டாரநாயக்காவும் தமது தந்தை முப்பது வருடங்களுக்கு முன்பு உருவாக்கிய ஒப்பந்தத்தை அமுலாக்க இடையூறு விளைத்திராதிருந்தால் இன்றைய அபாண்டமான அவல நிலையைத் தவிர்த்திருக்கலாமென பெருமிதத்துடன் சுட்டிக்காட்டியுள்ளார்.

'ஆனால்' அதே நேரத்தில் பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வகிக்கும் இவர், ஜனாதிபதியின் உத்தேச மாகாணசபைத் திட்டத்தை விமர்சிக்கும் பொழுது. சிங்கள இனத்தைத் தமிழருக்கு விற்றுவிடக்கூடிய ஒன்றாகுமென எதிர்ப்புணர்ச்சிக்குத் தூபமிட்டுள்ளாரென்பது வெளிப்படை. இக்கூற்று முன்னுக்குப்பின் முரணான தனது சொந்த விமர்சனங்களின் பண்பாட்டுக்கு அப்பாற்பட்ட தன்மையையும் உணராது - நடுவு நிலை மீறி - நிலை தடுமாறி நிற்பதன் போக்குத்தான் என்னே.

## பண்டித நேருவின் போதனை

உலகப் பிரசித்திபெற்ற அரசியல் மேதையான பண்டித ஜவஹர்லால் நேருவின் தீர்க்க தரிசனமான போதனையை நினைவு கூர்ந்தாவது திரு அநுராபண்டாரநாயக்கா நடுவு நிலை ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பாராக. சொல்லப்பட்ட உத்தமனான பண்டித நேரு கடைசியாக இலங்கைக்கு விஜயம் செய்தபொழுது, இலங்கை அரசியல் சாசனத்தைப்பற்றி பத்திரிகையாளர் எழுப்பிய கேள்விக்கு பின்வருமாறு விடை பகர்ந்தார்:-

"ஒன்றிற்கு மேற்பட்ட இன மக்கள் வதியும் நாட்டிற்கு பிரதேச மாநில சுயாட்சி அல்லது சமஷ்டி முறையே உகந்தது"

## தமிழ் அரசு

இலங்கையின் புராதன குடியிருப்பாளர்களாகிய சிங்களவரும் தமிழரும், அந்நியர் ஆக்கிரமிப்புக்கு முன்பு, பிரத்தியேகமான தத்தம் பகுதிகளில் அரசோச்சிவந்தமை சரித்திர பிரசித்தி வாய்ந்த உண்மையாகும். மேலும், அதிசயமூட்டும் ஓர் சம்பவம் என்னவெனில், கடைசியாக கண்டியை ஆண்ட மன்னனும் ஒரு தமிழ் மகனாவார். அவருடைய அமைச்சர்களாகிய சிங்கள இனத்தை சேர்ந்தவர்கள் அரசியல் பிரகடனங்களைத் தமிழிலேயே அமைத்துள்ளனர் என்பது கவனத்திற்கு எடுக்கவேண்டிய ஒன்றாகும்.

**ச. ஞானமூர்த்தி**

காலப்போக்கில் எமது நாட்டை ஆக்கிரமித்த அந்நிய அரசுகளான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் முதலானோர் தானும் அவ்வப்பகுதிகளில் பாரம்பரியமாய் இருந்துவந்த சமூக,கலாசார நடைமுறைகளுக்கு அமையவே நிர்வாகம் அமைத்துள்ளனர். ஆனால் ஆங்கிலேயர் நிர்வாக வசதிக்காகவே 1831ம் ஆண்டிலிருந்து இருபகுதிகளையும் ஒன்றிணைத்துள்ளனர்.

## விடுதலை இயக்கம்

எங்ஙனமாயினும் இரு இன மக்களும் எவ்வித வேறுபாடுமின்றி, உடன்பிறந்த சகோதரர்களைப்போல், பரஸ்பர அன்புடன் விசுவாச அடிப்படையில் வாழ்ந்துவந்தமை கண்கூடு. எனவேதான சிங்களப் பிரமுகர்களான திரு. ஜேம்ஸ் பீரிஸ் திரு டீ. பீ. ஜயதிலக, திரு. டீ. எஸ். சேனநாயக்க முதலானோரை இந்நாட்டின் தலைசிறந்த கல்விமானும் அரசியல் மேதையுமாகத் திகழ்ந்திருந்த கௌரவ பீ இராமநாதன் அவர்களை விடுதலை இயக்கத்தின் தலைவராகக் கணித்து, அவரை மனப்பூர்வமாகப் பின்பற்றி நின்றனர்.

ஆகவேதான் நன்றி மனப்பான்மை படைத்தவர்களுள் ஒருவரான கௌரவ ஆனந்த திஸ்ஸ டீ அல்விஸ் அவர்கள் அமைச்சரவையிலிருந்து மனச்சாட்சியின் கூற்றுக்கு அமைய பின்வரும் பாணியில் பகிரங்கமாக உள்ளதை உள்ளபடி கூற உந்தப்பட்டார்.

"தமிழ் மக்கள் மிகவும் நல்லவர்கள்; மென்மையானவர்கள். தமிழ் தலைவர்களே எமதுநாடு அந்நியர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்கு வித்திட்டவர்கள் ஆகவே அவர்கள்பால் நன்றியுடையவர் களாகவும் அவர்களுடைய மனம் புண்படாமலும் நடந்துகொவள வேண்டும்."

ஏறக்குறைய இந்த ரகத்திலேயே நிதி அமைச்சர் கௌரவ ரொனி டீ மெல் அவர்களுமே பாராளுமன்றத்திலும் பொதுமேடைகளிலும் உரை நிகழ்த்தியமை பகிரங்க உண்மையாகும்.

மேலும் இன்றைய அரசாங்க தரப்பினரும் இலங்கையிலுள்ள இந்திய தூதுவருக்குமிடையில் இனப்பிரச்னை சம்பந்தமான கருத்துப்பரிமாற்றம் ஏற்பட்டபொழுது இலங்கை அரசாங்கம் தமிழ்மக்களுக்கு 1958, 971, 1977, 1983 இல் இழைத்த அபாண்டமான அனர்த்தங்களைப்பற்றி சுடச்சுடக் கூறியுள்ளதிலிருந்து தமிழ் மக்கள் எவ்வளவு தூரம் துன்புறுத்தப்பட்டுள்ளார்களென்பதை சர்தர்ப்ப ரீதியக்க் கூற உந்தப்படலானேன்.

## அநுராவின் ஓலம்

உண்மையோ இங்ஙனப் வெள்ளிடைமலை போலிருக்கக் கூடியதாக, ஓர் எதிர்க்கட்சித் தலைமைப்பதவி வகுக்கும் பொறுப்புவாய்ந்தவர் இன்றைய அவலநிலைக்கு மூலகாரணம் என்ன என்பதை அவர் சிந்தனை எடுத்து ஆராயாது மனம்போன போக்கில்

"முதலாவதாக பயங்கரவாதிகளை நிர்மூலமாக்கிய பின்னரே இனப்பிரச்னை ஆராயப்பட வேண்டும்". என பொறுப்புணர்ச்சிக்கு அப்பால் பகர்ந்தமை விந்தையிலும் விந்தையாகும்.

## பயங்கரவாதம் அகதி முகாம் படுகொலை

அரசுக்கும் தமிழ் தலைவர்கட்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் நிகழ்ந்துகொண்டிருக்கும் பொழுதே அரச படையினர் அகதிமுகாம் ஒன்றினுள் புகுந்து தஞ்சம் புகுந்திருந்த 67 அப்பாவி மக்களை வதைத்துக் கொன்றனர்.

மேலும். சர்வதேச சட்டத்தை மீறி மன்னார் பகுதியில் 53 பொதுமக்களை குண்டுவீச்சு விமானங்களினால் (பொம்போர்ஸ்) தாக்கி அலற அழித்தனர் இச்சம்பவங்களை இன்று நாகரீக உலகம் உன்னி சிந்திப்பதற்குமேவெட்கமுறுமன்றோ! ஆகவே, பயங்கரவாதிகளென கௌரவ அனுரா அவர்களால் குறிப்பிடப்பட்டவர்கள் எவராகும்' என்பதை இக்கட்டத்திலாகுதல் உணர்ந்துகொண்டு தனது கருத்தை மாற்றிக் கொள்வாரா?

## சமாதான உணர்விருந்தால் சமாதானத் தீர்வுக்கு இடமுண்டு

மேலே சமர்ப்பிக்கப்பட்டுள்ள சரித்திரச் சுருக்கத்திலிருந்து இந்நாட்டு புராதன இனங்களின் ஒரு சாராரான தமிழருக்கு நியாய பூர்வமாக தனிநாட்டுக்கு உரிமை உண்டென்பதை எவரும் மறுக்க முடியாது. ஆனால் இன்றிருக்கும் இனக் கொந்தளிப்பையும் எதிர்நோக்கும் பயங்கர விளைவுகளையும் நீக்குவதற்காகவேனும். வடக்கு கிழக்கு இணைந்த மாநிலசுயாட்சித் திட்டத்தையேனும் அமைப்பதற்கு இந்தியப் பிரதமர். அமரர் திரு இந்திராகாந்தி ஆரம்பித்த நடவடிக்கையை மீண்டும் கையாண்டால் [இக் கூற்று இருசாராராலும் பெருமளவு ஏற்றுக் கொள்ளப்பட்டதென்றே சொல்லலாம்] எங்கள் நாடுபேரழிவிலிருந்து காப்பாற்றப் படுவதுமல்லாமல் எங்கள் நாட்டு அரசியல் வாதிகளுக்கும் அழியாப்புகழும் மலரும்!


உ

திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

காலம்: 10-9-86 (ஆவணி 25-ம் திகதி) புதன்கிழமை

இடம்: மணமகள் இல்லம்.

முகூர்த்தம்: காலை 9-02 முதல் 10-30வரை

மணமகன்: சு. முரளீதரக்குருக்கள்

மணமகள்: க. அனுராதா

10-09-86 புதன்கிழமை மாலை 4 மணியளவில் மணமகன் இல்லத்தில் வரவேற்புபசாரம் நடைபெறும்.

தங்கள் நல்வரவை நாடும்!

தி. கணேசசர்மா, 23, விநாயகர் வீதி, கொழும்புத்துறை.

இ. சுப்பிரமணிய குருக்கள் (அரியாலை ஸ்ரீசித்திவிநாயகர் தேவஸ்தான பிரதமகுரு) 77/2, A. V. ரோட், கொழும்புத்துறை.

(C-4375)

Diploma in Radio and Television Engineering

WEEKEND CLASSES — 6 MONTHS

★ Radio
★ Tape Recorder
★ Hi-Fi Stereo
★ Ampilifier
★ Radio Control
★ Tansformer-Winding

ஆகியவற்றைப் பிறர் உதவியின்றி உருவாக்கவும், பழுதுபார்க்கவும்.

★ TELEVISION ★ VIDEO TAPE DECK

ஆகியவற்றை நவீன சாதனங்களைக்கொண்டு பழுதுபார்க்கும் அறிவினை எமது நவீன ஆய்வுகூடத்தில் பெற்று பயனடையுங்கள்.

ஆரம்பம்:- 14-09-86.

Fees Rs. 250/-per month

பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். வெளிநாடு செல்பவர்களுக்கோர் வரப்பிரசாதம்.

CANTABIA INSTITUTE

21, MAIN STREET, JAFFNA.
T. phone: 24201.
(A-1313)

இன்று

யாழ் பீச் இன்சில்

அதிவணக்கத்துக்குரிய கலாநிதி வ. தியோகுப்பிள்ளை அவர்கள் தலைமையில்

ஜோ. எக்கட்டன் வழங்கும்

பனம்பொருள் உணவுகள் அறிமுக விழா

சிறப்படைய எமது நல்லாசிகளை வழங்குகிறோம்.

மணிக்குரல் மேஜர்ஷண்

மணிக்குரல் விளம்பர சேவை

மத்திய பஸ்நிலையம், யாழ்ப்பாணம்.
(A-1245)

# கல்வி வழிகாட்டலில் கண்காட்சியின் பயன்

ச. சுப்பிரமணியம்
கல்வி அலுவலர்

மாணவரின் கல்வி அபிவிருத்தியை முக்கிய நோக்கமாகக் கொண்டு கல்விக் கண்காட்சிகள் யாழ். கல்வித் திணைக்களத்தால் ஒழுங்குசெய்யப்பட்டு நடைபெற்றது இக் கண்காட்சி மூலம் காட்சிகளை ஒழுங்கு செய்வோரும், பார்வையாளரும் பயன் பெறுவர் என எதிர்பார்க்கலாம். விசேடமாக இனங்காணல், வெளியிடல், விவரித்தல், பதிவு வைத்தல், தெரிதல், காரணங்காணல், பிரயோகம், நல் மனப்பாங்கு ஏற்படுதல் ஆகிய திறன்களை விருத்திசெய்யவும்; கற்பித்தலுக்குப் பயன்படக் கூடிய கட்புல, செவிப்புல சாதனங்களை ஆக்கிக் கொள்ளவும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. அத்துடன் பாடசாலைகளின் கல்வி வளர்ச்சியையும், புறச் செயற்பாட்டு அபிவிருத்தியையும், அபிவிருத்திக்குத் தடையான காரணிகளையும், அபிவிருத்திக்கான எதிர்காலத் திட்டங்களையும். காட்சிப் பொருட்களினூடாகப் பெற்றூர், பழைய மாணவர் அறியச் செய்யவும் முடியும். இதனுல் அவர்கள் தம்பாடசாலைக் கல்வி வளர்ச்சிக்குத் தம்மால் ஆற்றக்கூடிய பணிகளையும், நிதியுதவிகளையும் உணரவும், பங்களிக்கவும் சந்தர்ப்பமளிக்கின்றது.

## ஒழுங்கமைப்பு

நோக்கங்களுக்கமைவான காட்சிப் பொருட்களை ஆக்கும் வேலைகளில் ஈடுபட மாணவர், ஆசிரியர், கல்வித்திணைக்கள அலுவலர் யாவர்க்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. கண்காட்சிகள் பாடசாலை, வட்டாரம், வலய, மாவட்ட நிலைகளில் நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யப்படும் காட்சிப் பொருட்கள் வட்டார நிலையிலும், வட்டாரநிலையில் தெரிவு செய்யப்படும் காட்சிப்பொருட்கள் வலய, மாவட்ட நிலையிலும் காட்சிக்கு வைக்கப்படும். ஒவ்வொரு நிலையிலும் தெரிவு செய்யப்படும் காட்சிப் பொருட்களைத் தயாரித்த மாணவர், ஆசிரியர்களுக்கு உற்சாகமூட்டும் வகையில் சான்றிதழ் வழங்கவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

## மாணவர் பயன்

ஆசிரியரினுல் வழங்கப்படும் ஒப்படைக் காட்சிப் பொருட்களை ஆக்குவதற்கும், மாணவர் தம் சுயவிருப்புக்கும் திறமைக்கும் அமைவான காட்சிப் பொருட்களை தத்தம் ஆற்றலுக்கியைய ஆக்குவதற்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளதால் மாணவர் தாம் ஆக்கவுள்ள காட்சிப் பொருளைத் தரவுகளுக்கு அமைவாகத் திட்டமிடவும், தேவையான மூலப் பொருட்களை அறியவும், தேடவும், மூலப்பொருட்கள் விற்குமிடங்களை படித்து அறியவும், காணவும், புலன்களாலுணரவும், அளவுகளைக் கணிக்கவும், தமது தேவையை வெளியிடவும், கொள்வனவு செய்யும் ஆற்றல் பெறவும், பணத்தைக் கையாளவும், கணக்கு வைக்கப்பழகவும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

வாங்கப்பட்ட, அல்லது சேகரிக்கப்பட்ட பொருட்களைக்கொண்டு திட்டத்திற்கு அமைவாகப் பொருளை ஆக்க முயற்சி செய்யும்போது திட்டப்படங்களை வரையவும், அளவுப் பிரமாணங்களைத் தீர்மானிக்கவும், ஆக்கும் வேலைப்படிகளைத் திட்டமிடவும், பொருளை ஆக்கவும், வேண்டிய கருவி, உபகரணங்களைச் சரியாக உபயோகிக்கவும், முடிப்பு வேலைகளைச் செய்யவும், அழகுபடுத்தவும், விளக்கக் குறிப்புகளைக் குறிக்கவும், வேண்டிய திறன்கள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. செய்யப்பட்ட காட்சிப் பொருள் இயங்கும் காட்சிப் பொருளாக அமையுமிடத்து பாடசாலை ஆய்வுகூடங்களில் பரிசோதனை செய்யவும், முடிவுகளை அறியவும், பிழையாக இயங்குமாயின் அதற்கான காரணங்களை இனங்காணவும், தெரியவும், சரியான தீர்மானங்களை எடுக்கவும், தீர்மானங்களுக்கு அமைவான திருத்தங்களை மேற்கொள்ளவும், சரிபார்க்கவும், சரியாக இயங்கவைக்கவும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

தான் செய்த காட்சிப் பொருளைக் காட்சிக்கு வைக்கும் போது அக்காட்சிப்பொருளைப் பற்றிப் பார்வையாளருக்கு விபரிக்கத் தேவையான தகவல்களைச் சேகரிக்கவும், பதிவு வைக்கவும், வாய்மூலம் பார்வையாளர்களுக்கு வெளியிடவும் தேவையான திறன்கள் விருத்தி செய்யப்படும். காட்சிக்குப் பொருள் வைக்கப்பட்டிருக்கும்வேளை பார்வையாளரிடமிருந்து வரும் வகையான கேள்விகள் எழுமிடத்து அதற்கான விடைகளைத் தேடவும், தெரியவும், வெளியிடவும், விவாதிக்கவும், சரியான முடிவைப் பார்வையாளர் ஏற்றுக் கொள்ளவும், புதிய விடயங்கள், விளக்கங்கள் பார்வையாளரிடமிருந்து கிடைக்குமிடத்துக் கற்கவும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. மாணவர் தம் நல் மனப்பாங்கை வளர்க்கவும், வெளிக்காட்டவும் நற்சந்தர்ப்பமளிக்கப்படுகிறது. உதாரணமாகக் கைத் தொழிலொன்றைச் செய்து காட்டும்போது இவ்வாறுன ''உடலுழைப்பால் ஈடுபடும் தொழில்கள் தாழ்வானதல்ல'' எனும் நல்ல மனப்பாங்கை வெளிக்காட்டவும், பார்வையாளர் உணரவும் முடியும்.

மேற்கூறியவாறே மாணவர் தம் சுயவிருப்பத்தினதும், திறமையினதும் பெயரில் பொருளைத் தயாரிக்கும்போது குறிப்பிட்ட துறையில் மாணவனது ஆற்றலை வெளிப்படுத்தவும், விருத்தி செய்யவும் முடியுமானதால் தன்னுலும் பெறுமதிமிக்கப் பொருட்களை அல்லது சேவையைச் செய்யமுடியும் எனும் நம்பிக்கையும், துணிவும் பிறக்கின்றன. செய்யப்பட்ட காட்சிப் பொருளைப்பற்றி மற்ருேர் பாராட்டும்போது பெருமையும், உற்சாகமும் அடைவதால் கல்வி, உடல் உளவளர்ச்சிக்குத் தூண்டுதலாக அமைகிறது. காட்சிச்சாலையில் உள்ள அத்தனை காட்சிப்பொருட்களையும் மாணவர் நேரடியாகப் பார்ப்பதால் பரந்த தெளிவான அறிவைப் பெறலாம். வகுப்பறைக் கற்றலில் இச்சந்தர்ப்பம் கிடைப்பதில்லை என்பதை நாம் அறிவோம்.

## கண்காட்சியின் பயன்

ஆசிரியர் தான் கற்பிக்கும் பாடத்திட்டத்திற்கு அமைவாகவும், தனது சொந்தத் திறமை, ஆற்றல்களை வெளிப்படுத்தக் கூடியதாகவும் காட்சிப் பொருட்களைத் தயாரிக்கச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்தது. உதாரணமாகத் தான் கற்பிக்கும் பாடத் திட்டத்திலிருக்கும் அலகொன்றினை விளங்கப்படுத்தக்கூடியதாக ஒரு கட்புல, செவிப்புலசாதனமொன்றைத் தயாரிக்க முற்படும்போது முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட அறிவு கைத்திறன், நல்மனப்பாங்கு விருத்தியடைகிறது. அத்துடன் அச்சாதனத்தைப் பயன்படுத்திப் பார்வையாளருக்கு விளக்கும்போது சில வேளை குறிப்பிட்ட அலகைத் தெளிவாகவும், குறுகியகாலத்திலும், விளங்கவைக்கமுடியும்.

## பொதுக் கண்காட்சிப் பிரிவு

பாடசாலை வட்டாரம் வலய மாவட்ட ரீதியாகவும் பின்வரும் தகவல்கள், புள்ளி விபரங்கள் காட்சிக்கு வைக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

1. பாடசாலையில் கற்கும் மாணவர் தொகையும் அதிகரிப்பு அல்லதுவீழ்ச்சிவீதமும்.
2. பாடசாலைக் கட்டடம் மற்றும் புறவசதிகளின்விருத்தி
3. உயர் கல்வி கற்போர் தொகையும், துறையும், கல்வி வாய்ப்புகளும்.
4. முறைசாராக் கல்வியின் நோக்கங்கள், பிரிவுகள், பாடசாலையை விட்டு விலகியோருக்கான தொழிற்கல்வி வாய்ப்புக்கள், துறைகள். வேலை வாய்ட் புக்கள்.

இதுவரை நடைபெற்ற கண்காட்சிகளில் ஆசிரியர், மாணவர் ஈடுபாட்டை அவதானிக்குமிடத்து மிகவுற்சாகமளிப்பதாகவிருந்தது. தமக்கு ஒப்படைக்கப்பட்ட வேலைகளையும் சுயமுயற்சிகளையும் செய்வதிலும், காட்சிக்கு வைப்பதிலும் ஆர்வத்துடனும் விருப்பத்துடனும், களைப்பின்றியும் காணப்பட்டனர். பல மாணவர் செயல்முறைகளைச் செய்வதற்குக்கிடைத்த பெரும் சந்தர்ப்பமாகக் கொண்டு மகிழ்ந்தனர். தொடர்ந்து வகுப்பறையில்கரும்பலகையையும் வெண்கட்டியையும், குறிப்புகளையும் கட்புல சாதனமாகக் கண்டு களைத்திருந்தவர்களுக்கு இம் முயற்சி ஒரு மாற்றமாகவும், உற்சாகமாகவும் இருந்ததை உணரக்கூடியதாக விருந்தது.

---

# சர்வதேச அகதிகள்!

அனந்த்




சர்வதேச அரங்கில் தற்போது மிகமுக்கியம் பெறும் விடயமாக அகதிகள் பிரச்னை அமைந்துள்ளது.

இயற்கை அழிவுகள், போர், உள்நாட்டுக் கலவரங்களால் ஒருநாட்டு மக்கள் தமது சொந்த நாட்டில் அகதிகளாவது வழமையான நிகழ்வாகும் ஆனல் இத்தகைய வழக்கம் தற்போது ஒரு புதிய திருப்பத்தைப் பெற்றுள்ளது.

சொந்த நாடுகளில் தொடர்ந்து அகதிகளாகவும் அன்ருடம் பாரிய பிரச்னைகளுக்கு முகம் கொடுக்கவேண்டியிருப்பதாலும் பல நாட்டவர் தமது நாடுகளைவிட்டு இன்று நாடோடிகளாக உலகின் மூலை முடுக்குகளிலெல்லாம் அகதி முகாம்கள் போடத் தொடங்கி விட்டனர். மேலும் பலர் அகதிகளாகப் புறப்பட்டுத் தரையிலும், நீரிலும் உயிரைப்பணயம் வைத்து நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

கடந்த சுமார் 10 வருடங்களிலேயே மக்கள் தமது நாடுகளைவிட்டு மற்ற நாடுகளுக்கு அகதிகளாக இடம்பெறுவது அதிகரித்துள்ளது. இந்நிலைமைக்கு இக்காலப்பகுதியில் சர்வதேசரீதியாக அரசியல் பொருளாதாரதுறைகளில் ஏற்பட்ட பாரிய நெருக்கடிகளே முக்கிய காரணங்களாகும்.

இலங்கை, ஆப்கானிஸ்தான் ஈரான், பாகிஸ்தான், வியட்நாம் ஆகிய நாடுகளின் மக்களே சர்வதேச அகதிகள் எண்ணிக்கையில் கூடுதலாகக் காணப்படுகின்றனர்.

இவர்கள் பெரும்பாலும் மேற்கு ஐரோப்பிய, ஸ்கண்டிநேவிய நாடுகள் நோக்கியே பெருமளவு நகர ஆரம்பித்துள்ளனர்.

மேற்குறிப்பிட்ட பிராந்தியங்களில் இம்மக்கள் புகலிடம் தேடுவதில் படும் சிரமங்கள் எண்ணிலடங்காதவை. தமது நோக்கத்தை நிறைவேற்ற சட்ட விரோதமான பல நடவடிக்கைகளிலும் இவர்களில் பலர் இறங்கியுள்ளனர்.

இலங்கை, பாகிஸ்தான், ஈரான், ஆப்கானிஸ்தான் அகதிகள் மேற்கு நோக்கிச் சென்று புகலிடம் தேடும் வேட்டையில் தம்மை ஓரளவு சுதாகரித்து நெருக்கடிகளைச் சமாளிக்கின்றனர். இதற்கு இந்நாட்டவர் புவியியல் ரீதியாக மேற்குடன் கொண்டுள்ள தொடர்புகளும், போக்கு வரத்து வசதிகள் உட்பட சர்வதேச நிலபரங்கள் சம்பந்தமாக இவர்கள் கொண்டுள்ள அறிவும் முக்கிய காரணங்களாகும்.

ஆனல் வியட்நாம் அகதிகள், நிலைமை மிகவும் பாிதாபகரமானது. வியட்நாமில் போர்நிறுத்தப்பட்டு 11 வருடங்களாகின்றன. ஆயினும் இந்நாட்டில் நிலவும் ஸ்திரமற்ற நிலையினுல் இந்நாட்டு மக்கள் நாட்டைவிட்டு வெளியேற ஆரம்பித்துள்ளனர்.

இவ்வாறு வெளியேறும் வியட்நாமியர்கள் மிகவும் பின்தங்கிய வாழ்க்கைத் தரத்தையுடையவர்கள். நாட்டைவிட்டு வெளியேற இவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளும் மிகவும் பின்தங்கிய - அபாயகரமான - நிச்சயமற்றவையாகவே காணப்படுகின்றன.

கட்டுமரங்களிலும், ஏனைய மரக்கலங்களிலும் கடல் மார்க்கமாக இவர்கள் புறப்படுகின்றனர்.

சில வருடத்துக்கு முன்னர் 'படகு மக்கள்' [Boat People] என்று விபரிக்குமளவுக்கு தென் கிழக்காசிய கடலில் இந்த வியட்நாம் மக்கள் லட்சக் கணக்கில் தத்தளித்தனர்.

அப்போது அவர்கள் காலநிலை அச்சுறுத்தல், உடமைகள், பெண்கள் மீது கடல் கொள்ளையர்களின் மிரட்டல்கள் என்பவற்றை எதிர்கொண்டு உயிரிழப்புகளுக்கும் உள்ளானுர்கள்.

வியட்நாமிய அகதிகளின் இத்துன்பியல் நிகழ்வுகள் இன்றும் தொடருகின்றன. மேற்குலகில் இவர்களின் கால்கள் பதியாமையால் மிகச்சிலரைத் தவிர இவர்களில் ஏனையோர் சர்வதேச கவனத்தைப் பெருமல் கடலிலேயே தத்தளித்த வண்ணமிருக்கின்றனர்.

கடந்த வாரம் ஜெனிவாவில் சர்வதேச அகதிகள் பிரச்னை குறித்து மேற்கு ஐரோப்பிய ஸ்கன்டிநேவிய நாடுகள் மகாநாடொன்றை நடத்தின.

இம் மகாநாட்டின் போது, 1980ம் ஆண்டு ஈரான் ஆட்சி மாற்றத்தை யடுத்து ஒரு லட்சம் ஈரானியர்கள் மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு தஞ்சம் புகுந்தனரென்று உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்கு ஐரோப்பாவில் 50 ஆயிரம் இலங்கை தமிழர்கள் தஞ்சமடைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர ஆப்கான், பாகிஸ்தான் அகதிகளும் மேற்கில் பெருமளவில் தஞ்சம் புகுந்துள்ளனர்.

சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், மேற்கு ஜெர்மன், டென்மார்க், நெதர்லாந்து, பிரிட்டன், சுவீடன் ஆகியன இந்த அகதிகளால் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கும்முக்கிய நாடுகளாகும்.

ஆரம்பத்தில் தாமாகவே முன்வந்து இந்நாடுகளில் பல இந்த அகதிகள்மீது பரிவுகாட்டின. ஆனுல் இத் தயவை சாதகமாகக்கொண்டு நாளாந்தம் ஆயிரக்கணக்கானோர் மேற்கு நோக்கிப்படையெடுத்தனர்.

இதனுல் பாதிக்கப்பட்ட நிஜமான அகதிகளையும், அகதிகள் என்ற போர்வையில் வாழ்வை வளமாக்க முனைவோரையும் பகுத்தறிவது மேற்கு நாடுகளுக்கு பெரும் சவாலாக உள்ளது.

இத்துடன் மேற்கு நோக்கிச் செல்லும் அகதிகள், பல சட்ட விரோத நடவடிக்கைகளுக்கும் காரணகர்த்தாக்களாக இருக்கின்றனர் எனக் குற்றஞ்சாட்டப்படுகிறது.

இக் குற்றச்சாட்டு உட்பட இந்த அகதிகளினுல் தமது நாடுகள் எதிர்நோக்கும் அரசியல் சமூகப் பிரச்னைகளை முன் வைத்து இவர்களைக் கட்டுப்படுத்த பல ஐரோப்பிய நாடுகள் தீர்மானித்துவருகின்றன.

ஆயினும் இந்நாடுகள், அகதிகளாக வருவோரின் நாடுகளில் குறிப்பாக இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈரான் ஆகியவற்றில் இடம் பெறும் அடிப்படை மனித உரிமைமீறல் சம்பவங்களால் அவசர முடிவுகளை எடுப்பதற்கு தயங்குகின்றன.

பெருமளவு அகதிகள் பெருக்கமும், அவர்களில் சிலரது ஈனச்செயல்களும் தலையிடி தரும் விடயங்களாக இருக்கலாம். ஆனல் தமது நாடுகளின் காத்திரமான வளர்ச்சியுடன் இந்த அகதி மக்கள் அவர்களது சொந்தநாடுகளில் எதிர்நோக்கும் ஸ்திரமற்ற நிலையை அவர்களுக்கு தஞ்சமளித்த நாடுகள் நன்கு ஒப்பிட்டு ஆராய வேண்டும். இதன்மூலமே பேச்சளவில் அல்லாமல் செயலுருவில் சர்வதேச மனிதாபிமானத்தைப் பேணமுடியும்.

---



''இது கிரிக்கட் சீஸனில்லையே! சிலோனிலிருந்து தேவலோகத்துக்கு இப்போது வரக்கூடிய பொருள் எதுவாய் இருக்கும்?''

''ஷெல்லாக விருக்கும் வாருங்கோ ஓடித் தப்பலாம்''

—ஆ

# தேவாரங்களில் இடைச்செருகல்

# அர்த்தமற்ற கற்பனவாதம்

சைவ சித்தாந்த சரபம் **க. கணபதிப்பிள்ளை**

''அருள் நூல்களிலும் கற்பனையான சந்தேகங்கள் ஏற்படுவது நியாயமே. சந்தேகங்கள் விசாலமான அறிவாலும் நூலறிவோடு கூடிய மதிநுட்பத்தாலும் நீங்க முடியும்'— இக்குறிப்புடன் ஈழநாடு (24-8-86) வார வெளியீட்டில் வெளிவந்த 'தேவாரத் திருப்பதிகங்களில் இடைச்செருகல்' என்னும் கட்டுரை எழுப்பிய சந்தேகங்களை நீக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

''எளியவனுகத் தன்னைக் கருதும் சுந்தரர் தன்னை ஒரு வழிகாட்டியாகக் காட்டக் கனவிலுங் கருதுவாரா?'' இது முதலாவது சந்தேகம்.

''சுந்தரர் பாடிய திருவொற்றியூர்ப் பதிகத்தின் பத்தாம் பாடல் வேருெருவர் பாடியதாகக் கருதக்கூடியதாக அமைகிறது. சுந்தரரின் பெருமையை எடுத்துக் கூறுகிறது. இப்பதிகத்தில் இதனைத் தவிரப் பத்துப் பாடல்கள் இருப்பதாக உணரமுடிகின்றது. சுந்தரரின் திருக்கச்சி ஏகம்பப் பதிகத்தில் பதினெரு பாடல் இருக்கிறது. ஒன்றில் பத்துப் பாடலும் மற்றதில் பதினெரு பாடலும் இருக்கின்றபோது பத்தும் வல்லார் எனப் பொருள் கூறுவது எப்படிப் பொருந்தும்? இது இரண்டாவது சந்தேகம்.

''மெய்ஞ்ஞானியாகிய சுந்தரர் தனது பதிகங்களில் எண்ணிக்கையிற்கூட இப்படியான தவறிழைப்பாரா? தான்பாடிய பாடலைப் படிப்போர் என்ன பயன் பெறலாம் என்றுகூறி அவற்றைப் படிக்கும்படி மற்றையோரைத் தூண்டுவாரா?''... இது மூன்ருவது சந்தேகம்.

அடுத்துச் சம்பந்தர் தேவாரம் பற்றிய சந்தேகங்களைக் கட்டுரையாளர் எழுப்புகின்ருர். முதலில் மேற்கூறிய மூன்று சந்தேகங்களை நீக்க முயல்கின்ருேம்.

★

சுந்தரரின் திருத்தொண்டத்தொகைத் திருப்பதிகம் பதினெரு பாடல்களையே உடையது. இதனை அடிப்படையாகக் கொண்டு தேவாரங்களைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதியை அருளினுர். இவையிரண்டையும் அடியொற்றியே சேக்கிழார் பெரியபுராணம் அருளினுர். பதினெராம் பாடல்களை இடைச்செருகல் என நீக்குவோமாயின் பெரியபுராணம் முதலியன கூறும் தனியடியார் அறுபத்துமூவரில் பூசலார், மங்கையர்க்கரசியார், நேசர், கோச் செங்கட்சோழர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், சுந்தரரின் தந்தையார் சடையனுர், தாயார் இசை ஞானியார் ஆகிய ஏழு நாயன்மார்கள் நீக்கப்படுவர். அறுபத்துமூவர் 56ஆவர். எனவே, பதிகம் பதினெரு பாடலிலும் உண்டு என்பது தெட்டத் தெளிவு.

> **''தேவாரங்களில் இடைச்செருகல்'' என்ற மட்டுவில் க. நடராசாவின் ஆய்வுக் கட்டுரை கடந்த மாதம் 24ம் திகதி ஈழநாடு வார மலரில் இடம்பெற்றது. அக்கட்டுரையை மறுத்துத் தேவாரங்களில் இடைச்செருகல் அர்த்தமற்ற கற்பனவாதம் என்கிருர் இக்கட்டுரையாளர்.**

எனவே இவ்வழக்கத்தை முதன் முதலில் யார் ஏற்படுத்தினுர் என்பதை முதலில் நாம் அறிதல்வேண்டும். காலத்தால் சம்பந்தருக்கும் முற்பட்டவரும் திருநெறிய சைவத் தமிழ்ப் பாடல்களை முதன் முதல் பாடியவர் காரைக்காலம்மையாரே என்பது எல்லா. ஆராய்ச்சியாளரும் அநுபூதிச் செல்வர்களும் ஏற்றுக்கொண்ட உண்மையாகும்.

அம்மையார் தாம் அருளிய திருப்பதிகங்கள் இரண்டிலும், அற்புதத் திருவந்தாதியிலும் ''முத்திரைக் கவி'' எனவும், ''பதிகப்பயன் கூறும் பாடல்'' எனவும், ''திருக்கடைக் காப்பு'' எனவும் கூறப்பெறுகின்ற பாடலைப் பாடியருளினுர். இவர்க்குப்பின் இதனைக் கைக்கொண்டு சம்பந்தரும், அவருக்குப்பின் சுந்தரரும் பாடியருளினர்.

அம்மையாரின் திருப்பதிகம் இரண்டும் பதினெரு பாடல்களையே கொண்டவை. பதினெராம் பாடல்களில் தமது பெயரையும் தமது பாடலைப் படிப்போர் அடையும் பலனையும் கூறியுள்ளார்.

இப்பாடல்களும் செருகுகவிகளாக இருக்கலாந்தானே? என வினுவுவார்க்குத் தக்க விடை அம்மையாரின் அற்புதத்திருவந்தாதி வாயிலாகக் கிட்டுகின்றது.

ஒரு செய்யுளின் அந்தத்தை அடுத்த செய்யுளின் ஆதியாகக் கொண்டு பாடப்பெறுவது (அந்தம்+ஆதிஆகிய) அந்தாதி அம்மையார் அருளிய அந்தாதி 101 பாடல்களை உடையது. அதன் இறுதிப்பாடல் பாடற்பயன்கூறுவது முத்திரைக்கவி. அந்தாதியின் இறுதிச் செய்யுளின் இறுதிச் சொல் அந்தாதியின் முதற்செய்யுளின் முதற்சொல்லாக அமைதல் வேண்டும் என்பது பொதுவிதி. அதன்படி ''பிறந்து'' என்னுஞ் சொல்லை ஆதியாகவும் அந்தமாகவும் கொண்டு அம்மையாரின் அந்தாதி அற்புதமாக அமைந்திருக்கின்றது.

காரைக்காலம்மையார் கூறியமைபோலவே அவருக்குப் பின் வந்த சம்பந்தரும், அவருக்கும் பின்வந்த சுந்தரரும் கூறியருளினர் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றன அல்லவா? பதிகப்பயன் கூறும் முத்திரைக் கவிகள் செருகுகவிகளல்ல என்பதும் தெரிகின்றதல்லவா? பதிகம் பத்துப்பாடலாக இருக்க வேண்டிய அவசியமில்லை அதற்கு மேலும் இருக்கலாம் என்பதும் தெரிகின்றதல்லவா?

★

மேற்கூறியவற்ருல் சந்தேகம் நீங்காவிடின் கட்டுரையாளரின் சம்பந்தர் தேவாரம் பற்றிய சந்தேகங்களையும் மேலும் ஆராய்ந்து பரிபூரணமான தெளிவு பெறுவோமாக.

சம்பந்தரின் திருநீற்றுப் பதிகப் பதினேராம் பாடலை-முத்திரைக்கவியை- திருக்கடைக் காப்பை எடுத்துக் காட்டி, தாய்பிள்ளை, புத்தகம் விற்கும் கவிஞன் என்போரை உதாரணங் காட்டி ''தன்னைப்படர்க் கையில் வைத்து, தான்பாடிய பாடல்களைப் படித்து வல்லவராயும் நல்லவராயும் ஆம்படி சம்பந்தன் ஏன் எவரையாவது கேட்கவேண்டும்? ........சான்ருண்மை சம்பந்தனிடமில்லையா? ஏன் சம்பந்தன் இப்படிக் கூறவேண்டும்!'' எனக் கட்டுரையாளர் புலபடக் கேட்கின்ருர். தொடர்ந்து திருவாலவாய்ப் பதிகத்தின் பதினேராம்பாடற் பகுதியைக் காட்டி, மீண்டும் பத்தாம் பாடல்-பதினேராம் பாடற்பிரச்னையைக் கொண்டு வருகின்ருர். இவற்றிற்குரிய பதிலைக் காரைக்காலம்மையார் திருப்பாடல்களைப் பற்றி மேலே எழுதியவற்ருல் நன்கு அறியலாம் எனினும் சம்பந்தர் முதலியோர் பாடல்களாலும் விளங்கிக்கொள்வோமே.

சம்பந்தரின் திருப்பாசுரத் திருப்பதிகம் பன்னிரண்டு பாடல்களைக் கொண்டிருப்பதால் ''யாரோ இனந்தெரியாத ஒருவர் புகுத்தியிருப்பதைத் தெளிவாகக் காட்டுகின்றன'' என்கிருர் கட்டுரையாளர்.

★

திருஞானசம்பந்தப் பிள்ளையாரின் திருப்பதிகங்கள் சில பன்னிரண்டு திருப்பாடல்களை உடையன. சீர்காழிக்குப் பன்னிரண்டு திருப்பெயர் இருப்பதனுல் அங்கு பாடப்பெற்ற சில பதிகங்களிலே பன்னிரண்டு பாடல்களைக் காணலாம். திருப்பாசுரம் மிகப் பிரசித்தமானது. இதில் வரும் ''வாழ்க அந்தணர், வானவர் ஆன்இனம்'' எனத் தொடங்கும் தேவாரத்தைப் பாடாத சைவர் இலர். மதுரையில் வைகையாற்று நீரிலே எதிர் ஏறிச் சென்ற அற்புதத்தை நிகழ்த்திய பதிகம் இதுவே. ஏடு ஏறிய இடம் திருவேடகம் என்னும் தலமாக விளங்குகின்றது. இப்பதிகத்தைச் சேக்கிழார் ''மெய்ப்பாசுரம்'' என வியந்து போற்றுகின்ருர். இதில்வரும் பன்னிரண்டு பாடல்களில் முதல் 5 பாடல்களுக்கும் 17 பாடல்களிலே அரியதோர் விளக்கவுரையைச் செய்யுளில் செய்தருளிய சேக்கிழார் 6 முதல் 11 பாடல் வரை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு பாடலிலே விளக்கம் அளித்துள்ளார். ஆனுல் இறுதிப் பாடலுக்கு விளக்கமளித்திலர். இதனுல் அது ''இடைச்செருகல்'' என எண்ணலாகாது. ஏனெனில் சம்பந்தர் முதலாவதாக ஓதியருளிய ''தோடுடைய செவியன்'' எனத் தொடங்கும் பதிகப் பாடல்களை விளக்கும்போது முதற்பாடலை விளக்கஞ் செய்து, அடுத்துவரும் பாடல்கள் பலவற்றைப் பற்றி யாதும் கூருது 8, 9, 10, 11 ஆம் பாடல்களின் தன்மையை நன்கு எடுத்துக்காட்டியுள்ளார். ''திருப்பதிகம் நிறைவித்துத் திருக்கடைப்புக் காப்புச் சாத்தி இருக்குமொழிப் பிள்ளையார் எதிர் தொழுது நின்றருள'' என்கின்ருர். பெரியபுராணம், திருஞானசம்பந்தர் புராணம் 80-ஆம் பாடற்பகுதி இது. இவ்வாறு ''பதிகத் திருக்கடைக் காப்புப் பரவி'' என 163 ஆம் பாடலிலே கூறிக் ''கண்ணுரமுதுண்டார் காலம் பெற அழுதார்'' என்கின்ருர். எனவே, திருக்கடைக்காப்புப் பாடாதபதிகம் எதனையுமே சம்பந்தர் பாடவில்லை என்பதைத்தெளிவாக அறியலாம்.

★

வெள்ளிப்பாட்டு ஆதாரம் கற்பனைகளுக்கு இடம் என்னும் இரண்டு உப தலைப்பிலே சேக்கிழார் முதலியோர்க்கு மிகப் பிற்பட்ட காலத்தவராகிய தம்பிரான் ஒருவர் பாடிய பதிகம் என்னும் குறிப்போடு திருப்பனந்தாள் மடச் சம்பந்தர் தேவாரப் பதிப்பின் பிற்சேர்வு என்னும் பகுதியில் இருப்பதாக எடுத்துக்காட்டி மூன்று கற்பனைகளைச் செய்து அவற்றைத் தாமே நிராகரித்து, ஈற்றில் ''சம்பந்தன் பாடலுக்குப் பதிகப்பயன் கூறும் பாடலொன்று சம்பந்தன் தவிர்ந்த வேருெருவரால் பாடப்பட்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே வெள்ளிப்பதிகம் இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது'' என்கிருர் கட்டுரையாளர்.

★


பிறர் எவருமே சம்பந்தர் பதிகங்களுக்குப் பதிகப்பயன் பாடவில்லை; சம்பந்தரே பாடியுள்ளார் என்பதை ஆதாரபூர்வமான கருத்துக்களையே சொல்லும் சேக்கிழார் செப்பியுள்ள பெரியபுராணத்தின் துணைகொண்டு உறுதி செய்வதே அறிவுடைமையாகும்.

சம்பந்தர் பல்வேறு சந்தர்ப்பங்களில் ''எனதுரை தனதுரை'' எனவும்'' ''ஆணை நமதே'' எனவும் தாமும் சிவமும் சுத்தாத்துவிதமாயி நப்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். இது தன்முனைப்பல்ல தாதையை தடிந்த சண்டீசர்

(8 ம் பக்கம் பார்க்க)

## இரகசியம் இதுதான்

மக்கள் கிளர்ச்சியை அடக்கமுடியாமல் தவித்த ஒரு பழங்கால அரசன் அடுத்த நாட்டின் அரசன் எங்ஙனம் சர்வாதிகாரியாக விளங்குகிருன் என்பதை அறிய ஒரு தூதுவனை அனுப்பினுன். தூதுவனுடன் ஒருவார்த்தையும் பேசாமல் அருகிலுள்ள கோதுமை வயலுக்கு அவனை அழைத்துச் சென்ற அந்த சர்வாதிகாரி வயலில்உள்ள பயிர்களின் மட்டத்துக்கு மேலாகவளர்ந்திருந்த ஒவ்வொரு பயிரையும் சமமாக வெட்டித்தள்ளினுன் தூதுவனுக்கு இரகசியம் புரிந்துவிட்டது.



## நாடோடிக் கதைகள்

தமிழில்: நீர்வை பொன்னையன்

### துரதிருஷ்டம்

ஒருவன் ஒரு பெரும் உத்தியோகப் பதவியைப் பெறுவதற்குக் கடுமையாக முயற்சித்தான். அந்த முயற்சியில் அவன் தோல்வியடைந்தான்.

ஒரு நாள் அவனுடைய தந்தையின் பிறந்த தினத்தைக் கொண்டாடுவதற்கு ஒரு விருந்துபசாரம் நடந்தது

அவனது மூத்த சகோதரன் அவனுடைய தந்தைக்கு ஒரு கப் வைனைக் கொடுத்தான். அவன் பெரும் பதவியிலுள்ளவன்.

''இந்த வைன் மிகச் சிறந்தது!''

தந்தை கூறினுர்.

இரண்டாவது மகன் தந்தைக்கு ஒரு கப் வைனைக் கொடுத்தான்.

''சீ. இது படுமோசமான புளிப்பான வைன்!''

முதியவர் முகத்தைச் சுழித்துக்கொண்டு வெறுப்புடன் கூறினுர்.

உண்மையில் இந்த வைன் புளிப்பானதாக இருக்ககூடும் என்று இரண்டாவது மகனின் மனைவி எண்ணினுள். ஆகவே அவள் மூத்த சகோதரனின் மனைவியிடம் ஒரு கப் வைனை வாங்கினுள், அந்த வைனை அவள் முதியவருக்குக் கொடுத்தாள்.

''இந்த வைனும் படுமோசமானது;

கடும் புளிப்பானது''

முதியவர் வெறுப்புடன் கத்தினுர்.

''உங்களது மூத்தமகன் உங்களுக்குக் கொடுத்த அதே வைன்தான் இது. அவர் கொடுத்தபொழுது இனிப்பாக இருந்த வைன் நான் தரும்பொழுது அதே வைன் எப்படிப் புளிப்பாக மாறியது?''

இரண்டாவது மகனுடைய மனைவி கேட்டாள்:

''நீங்கள் அதிருஷ்டம் கெட்டவர்கள். இனிப்புள்ள வைன் கூட நீங்கள் தொடும்பொழுது அது புளிப்பாக மாறிவிடும்.''

முதியவர் ஏசினுர்.

அதிகாரத்திலுள்ளவன் ஒரு விடயத்தைக் கூறினுல் அது உண்மையாகவிருக்கும்; பாராட்டப்படும். அதே விடயத்தை ஒரு சரதாரண மனிதன் கூறினுல் அது பயங்கரப் பொய்யாக இருக்கும்; அது இழிவாகக் கூறப்படும்.

இதுதான் இன்றையநிலை.

இப்படி முதியவரின் இளைய மகனும் மனைவியும் வேதனைப் பட்டனர்.

இந்த நிலை மாருமலா இருக்கப் போகின்றது?

வரலாறு பதில் கூறும்.

### தன் தவறை ஒப்புக் கொள்ளாதவன்

இஞ்சி எங்கு விளைகின்றது என்று ஒரு மனிதனுக்குத் தெரியாது. அது மரங்களில் விளைகின்றது என்று அவன் எண்ணினுன்.

அது நிலத்தில் விளைகின்றது என்று யாரோ ஒருவன் அவனுக்குக் கூறினுன்.

இது உண்மையென்று அவனுல நம்பமுடியவில்லை. அவன் பந்தயம் பிடித்தான்.

''பந்தயத்திற்கு எனது கழுதையை நான் பணயமாக வைக்கின்றேன். நாம் பத்துப் பேரைக் கேட்டுப்பார்ப்போம். அவர்கள் எல்லோரும் இஞ்சி நிலத்தில் விளைகின்றது என்று கூறினுல் கழுதையை நீ எடுத்துக்கொள்ளலாம்.''

அவன் கூறினுன்.

இதுபற்றி அவர்கள் இருவரும் பத்து ஆட்களைக் கேட்டனர் இஞ்சி நிலத்தில்தான் விளைகின்றது என்று அவர்கள் எல்லோரும் கூறினுர்கள்.

''நீ கழுதையை எடுத்துச் செல்!'' அந்த மனிதன் கூறினுன்.

''ஆனுல் எல்லாம் ஒன்றுதான், இஞ்சி மரத்தின்மீது தான் விளைகின்றது. இது எனக்கு நன்ருகத் தெரியும்!''

இதே நிலையில்தான் இன்று எமது நாட்டில் அதிகாரத்தில் உள்ள பெரும் தலைவர்கள் இருக்கின்ருர்கள்.

# அறிவும் அனுபவமும்

1. கேள்வி: இன்றைய சூழ்நிலையில் பழைய பாரம்பரியமான தமிழ்க்கல்வியை ஒரு சிலராவது பயின்று பாதுகாப்பது நலமா? நலமானுல் அதை எப்படிப் பேணலாம்?

பதில்: எந்தச் சூழ்நிலையிலும் தமிழ்மொழியின் இலக்கண இலக்கிய வளத்தை அறிந்து கொள்ளவேண்டிய கடமை தமிழ் மக்களுக்கு உண்டு. அப்படியான நிலையில்தான் நாம் தலைநிமிர்ந்து நிற்கமுடியும். புரட்சிக்கவி பாரதியும் ''யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவன்போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை'' என்று பாடிய நோக்கமும் இதுதான். பண்பாட்டை வளர்ப்பது மொழி. எனவே மொழியின் வளத்தை ஒவ்வொருவரும் அறிந்து கொள்ளவேண்டும். வீரவாழ்வையும் வெற்றி வாழ்வையும் நீதியான அரசியலையும், காதல் மாண்பையும் கொடையின் திறத்தையும் சித்திரிக்கும் சங்க இலக்கியங்கள் தமிழனது தனிப்பெரும் சிறப்புக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் திருக்குறள், அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்ருகும் என்பதைக் காட்டும் சிலப்பதிகாரம், மரபு தவருது வாழ்ந்து பெருமை பெறுவதை யுணர்த்தும் கம்பராமாயணம், அத்துடன் தமிழ் மொழியின் இலக்கண அமைப்பு ஆகியவை இன்றைய சூழ்நிலையிலும் அனைவராலும் படிக்கப்பட வேண்டும். இதனைப் பாடசாலைப் பாடத்திட்டத்தில் அதிகம் காண முடிவதில்லை. எனவே வாரஇதழ் (செய்தித்தாள்) போன்றவற்றின் மூலம் தொடர்ந்து எழுதுவதும் இந்நூல்களின் பேரால் மன்றங்கள் அமைத்துப் பணியாற்றுவதும் வரவேற்கத்தக்கது.

2. கேள்வி: இன்று சமய வழிபாடுகளுக்கு அளிக்கப்படும் இடம் பற்றிய தங்கள் கருத்தென்ன? சமய வாழ்வுக்கு எதிர்கால சந்ததியினரை இட்டுச் செல்வதாக வழிபாட்டு முறைகளில் மாற்றங்கள் கொண்டுவரப் படவேண்டுமா?

பதில்: இன்று சமய வழிபாடுகள், ஆலய விழாக்கள் மூலமும் விரதங்கள் மூலமும் ஆற்றப்படுகின்றன. ஆனுல் உள்ளத்தில் ஊன்றிப்பதிந்து பயன் தருவதாகக் கூறமுடியாது. நாயன்மார்களின் சமய வாழ்வு சமூகத்தில் அறிய வைக்கப் படவேண்டும். சமயம் என்பது ஒருவனை நல்லவனுக்கி விடுவதோடு நாட்டுக்கு உதவும் நற்பிரசையாக்கிவிடும் ஒரு நெறியென்பதை நாயன்மார் காட்டியவழியில் உணர்த்துவது ஆலயங்களின் கடமை. இதற்கு அந்தணர்களும் அறங்காவலர்களும் முன்னின்று அருளுரைகள் கூறிப் பூசையை முடிக்க முன்வரவேண்டும். மனக்கவலையை மாற்றும் பிரார்த்தனைகளை எல்லோரும் சேர்ந்து சொல்லி இறைவனோடு உறவாடும் முறையைச் சைவத்திருக்கோயில்கள் எங்கும் கொண்டு வரவேண்டும்.

3. கேள்வி: சிறந்த ஆலய நிர்வாகியாகவும் உயர்ந்த ஆத்மீகச் சிந்தனைகளைக் கிளர்ந்தெழச்செய்யும் சமயப்பிரசாரகராகவும், கால்நூற்றுண்டுக்கு மேல் ஆழமான கல்விப்பணி புரிந்த கல்வியாளராகவும் திகழ்கிறீர்கள் தங்களைப் போன்று பணியாற்றக் கூடியவர்கள் யாரையாவது உருவாக்கியிருக்கிறீர்களா? இல்லையானுல் இனிமேலாவது உருவாக்கும் திட்டங்கள் உண்டா?

பதில்: முப்பது ஆண்டுகள் ஆசிரியராயும், அதே பணியோடு இருபத்தைந்து ஆண்டுகள் ஆலய நிர்வாகியாகியும் இருந்து பணியாற்றும் வாய்ப்பு எனக்குக்கிடைத்தது. அம்பாள் எனக்களித்த ஒரு வாய்ப்பு ஏதோ கொஞ்சம் பிரசங்கம் செய்யும் ஆற்றலாகும். இந்த ஒரு ஆற்றல் என்னையும் உயர்த்தி, எம்பெருமாட்டியின் திருக்கோயிலையும் எழுச்சி பெறச்செய்தது. எனது வாழ்வு ஒரு தனிப்பட்ட வாழ்வு பந்த மற்ற வாழ்வு. இத்தகைய நிலையில் இன்று சமயப் பணி புரிய முன்வருவோர் மிகமிகக் குறைவு. விருப்பமிருந்தாலும் சமயப்பணி, ஆலயநிர்வாகம் என்பவற்றுக்கு முன்வர அஞ்சுகிருர்கள். தவறு நேரிடுமோ எனறு கூச்சமடைகிருர்கள். ஆனுல் ஆலயப் பணியை என்னைத் தொடர்ந்து ஆற்றுவதற்கு இரண்டொருவர் பயிற்சி பெற்றுள்ளார்கள் என்பது மகிழ்ச்சிக்குரியது. என்றுலும் சொற்பொழிவுகள்செய்து மக்கள் மனதை வசீகரித்து தெய்வீக நெறிக்குத் திருப்புவதற்கு என்னுல் பயிற்சி கொடுக்க முடியாமல் இருக்கிறது. அதற்கு அம்பாள்தான் வழிகாட்ட வேண்டும். குருகுலத்தின் மூலமும் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் மூலமும் இதுவும் நிறைவேற வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்.

4 கேள்வி: சொற்பொழிவுத் துறையில் தாங்கள் புகுந்த காலத்து நிலைக்கும் தற்போதைய நிலைக்கும்இடையில் நிலவும் வேறுபாடுகள், வளர்ச்சி நிலைகள், அத்துறையில் ஈடுபட்டுள்ள ஏனையோர் பற்றிய தங்கள் கருத்து?

பதில்: 1953ம் ஆண்டு கொழும்பு நகரில் கல்விகற்பித்த காலத்தில் பண்டித பரீட்சையிலும் சித்தியடைந்து சைவப்புலவர் பரீட்சையிலும் சித்தியடைந்து விளங்கியமையால் பலரும் என்னை உரையாற்றும் அரங்குகளுக்கு அழைத்தனர். ஒரு பேச்சு நிகழ்த்த ஏறக்குறைய ஒரு வாரம் ஆயத்தம் செய்வேன். இதனுல் நல்ல வரவேற்பைப் பெற்றேன். இதனைத் தொடர்ந்து போதிய அறிவையும்



# சிவத்தமிழ்ச்செல்வி பதில்கள்

வளர்த்தேன். 57—75ம் ஆண்டுகளுக்கு இடையில் பெரும்பாலும் ஒரு வாரத்தில் மூன்று உரைகளாவது கோயில்கள், இலங்கை வானெலி, மன்றங்கள் ஆகியவற்றில் ஆற்றுவேன். நல்ல வரவேற்புக் கிடைத்தது. ஆனுல் இன்றையநிலையில் ஆலயக் கடமையும், அநாதையில்லப்பணியும் முன்னிற்பதால் சொற்பொழிவு செய்வதைக் குறைத்துக் கொண்டேன்

இன்று சொற்பொழிவு செய்வோரைப் பற்றி விமர்சிக்க நான் முன்வரவில்லை. ஆனுல் புராணக்கதை, கற்பனைக் கதை, சிரிக்கவைக்கும் நகைச்சுவை கேட்டகாலம் இன்றைக்கு இல்லை. இன்று எதிர்நோக்குவது சமூகத்துக்குப் பயன்படக்கூடிய வார்த்தைகள். சமூகத்தை நல்ல பக்கத்துக்குத் திசைதிருப்பக் கூடிய வார்த்தைகள், விஞ்ஞான ரீதியாகவும் ஒப்புக்கொள்ளக் கூடிய உண்மைகள் ஏதாவது வெளிவருகிறதா? என்பது தான். எனவே ஒவ்வொரு சம்பவத்தையும் தத்துவ உண்மையோடு விளக்க வேண்டியது இன்றைய சொற்பொழிவாளர்களின் கடமையாகும் அத்துடன் நீண்டநேரப் பேச்சுகள் தவிர்க்சப் படவேண்டும் இன்று சொற்சுருக்கமும் பொருட்பெருக்கமும் தான் தேவை.

5. கேள்வி: ஈழநாடு வாரமலர் மூலம் தாங்கள் சைவத் தமிழுலகுக்குத் தெரிவிக்க விரும்பும் பிரத்தியேகச்செய்தி?

பதில்: ஈழநாடு வாரமலரின் மூலம் ''நாடும் நாமும்'' என்ற தலைப்பில் சில கருத்துக்களை வாரந்தோறும் வெளியிடலாம் என்று விரும்புகிறேன்.

—முரளி—

# 'ரியூஷன்' கல்வி முறை

## தமிழருக்குப் புதிதல்ல

கல்வியே தமிழரின் வாழ்க்கைக்கு அச்சாணி. முற்காலத்திலும் இக்காலத்திலும் தமிழர் சரித்திரத்தில் சண்ட வீரம் தியாகம், பெருமை எல்லாவற்றுக்கும் மூல சக்தி கல்வி. வாழ்க்கைக்கும் தேசாசாரத்துக்குமேற்ப கல்வி முறையும் அமைகிறது. இக்காலத்தில் ''பச்சை ஊன் இயைந்த வேற்படைகள் வந்த போதிலும்'' கல்வியை எமது சிருர்களுக்கு அளித்தனர். சமூகத்துசகுச் செய்யும் தொண்டு எனக்கருதி அதற்குப் பொறுப்பானவர்கள் முறைசார் கல்வியை வழங்கி வருகிருர்கள்.

இன்றைய நிலையில் பணத்தைக் கொடுத்துப் பெற்ருேரும் மற்ருேரும் தாம் விரும்பிய கல்வியை வாங்கலாம் என்று நம்புகிருர்கள். இதற்கு அனுகூலமாக ரியூட்டரிசளும், தனியார் உயர் கல்வி நிறுவனங்களும் செயற்படுகின்றன ரியூட்டறிகளில் இடையருத வகுப்புக்கள் நாள் தோறும் நடைபெறுகின்றன. பகல்நேர வகுப்பு, மாலை வேளை வகுப்பு, வினுத்தாள் வகுப்பு, துரித மீட்டல் வகுப்பு—இப்படி எத்தனையோ வகைகள். போதாதற்கு 'ஷிப்டு' முறைவேறு வைசகிருர்கள். எல்லாம் வியாபார மயம்.

பணம் கொடுத்துக் கல்வியை வாங்கிவிடமுடியுமா?

**ஈ. ஆர். திருச்செல்வம்**

முற்காலத்தில் மாணவர்கள் ஆச்சிரமத்தில் குருகுல வாசம் செய்தார்கள். பிற்பட்டுத் திண்ணைப்பள்ளிக்கூடங்களும், மடாலயங்களும் கல்வியை வழங்கின. அந்நியர் வருகையுடன் கல்வி நிறுவன அமைப்பின் கீழ் வந்தது. தொடர்ந்து இந்தக்கட்டத்தில் எண்ணில்லா ரியூட்டறிகள். ஆனுல் கல்வி ஒன்றுதான் இப்போது முறைமாறி விட்டது மருந்து ஒன்ருகவே இருந்தாலும் பத்தியம் மாறி விட்டால் மருந்தே விஷமாகி விடும்.

குழந்தைக்கோ, மற்றவர்க்கோ கொடுக்கவேண்டிய படிப்பைப் பணத்தைக் கொடுத்து வாங்கிவிட முடியாது என்பதற்குத் தொல் சீர்சாஸ்திரங்கள் ஒன்றில் கதை ஒன்று உண்டு.

அக்காலத்தில் ஆசாரியனுடைய கூட்டுறவும் குருவுடன் கூடி வளர்தல், செயல் முறையும்; வாய்மொழி உபதேசமுமன்றி வெறும் புத்தகப் படிப்பு இல்லை அது அக்காலத்தில் சாத்தியமில்லை.

பரிஷித் மஹாராஜாவுக்குச் சுகதேவர் ஒன்பது நாட்களில் ஸ்ரீ பாகவதத்தைச் சொல்லி முடித்தார். அக்காலத்தில் கல்வியின் பயன் மெய்ப்பொருள் காண்பதே. பரிஷித்து நிலையான ஆத்ம ஞானத்தை அடைந்தார். இதை அறிந்த சாதகவர்மா என்ற அரசன் தானும் ஆத்மஞானம் பெற வேண்டும் என்ற விருப்பத்தினுல் ஸ்ரீ பாகவதத்தை வாய்மொழியாக உபதேசிக்கக் கூடிய பண்டிதர் ஒருவரை நியமித்தார்.

ஒருநாள் பண்டிதருடன் அவர் மகளும் வந்திருந்தாள். அரசர் ஞானம் பெறுவதற்குத் தன்னுடைய தந்தையை ஆசாரியஞக நியமித்துள்ளார் என்பதனை அறிந்து மன்னனிடம். ''அரசே! பரிஷித்து மஹாராஜாவுக்கு ஆத்ம ஞானம் கிடைத்ததென்ருல் அவர் குருவாகக்கொண்ட சுகதேவர் சீலமும் அடக்கமும் உடையவர் கந்தர்ப்பத்திஞலோ தான் அடைந்த ஸ்தானத்தின் பயஞகவோ சமுதாயத்தில் தனக்குள்ள கடமைகளைச் சுயநலப் பற்றின்றிச் செய்பவர். எனது தந்தையார் உலக மாயையில் இருந்து விடுபடாதவர் பணத்துக்கு ஆசைப்பட்டு உபதேசம் செய்யும் அவரது பாகவதத்தைக் கேட்டால் உங்களுக்கு எப்படி ஞானம் வரும்? எரியும் தீபத்தைக்கொண்டுதான் பிறிதொரு தீபத்தை ஏற்ற முடியும்'' என்ருள்.

இதைக்கூறக்கேட்ட அரசன் ஆத்மஞானி ஒருவரைத் தேடி புறப்பட்டார்.

நமது ஞானத்தைப் பொதுவுடைமையாக்க மறுப்பதும் சமூக விரோதச் செயல்தான்.

## அழுக்காமை

கடலில் அழுக்காமை என ஓர் ஆமை இருக்கின்றது இந்த ஆமைக்கு முதுகில் 13 படைகள் (மேற்தோல்கள்) இருக்கின்றன. இவைகள் முட்டையிடக் கரைக்கு வரும் போது காத்திருந்து சிலர் பிடித்துக் கொள்வார்கள். பின்பு ஆமையின் முதுகில் உள்ள படைகளில் பன்னிரண்டையும் நெருப்பால் வாட்டிக் கழட்டி எடுப்பார்கள். அந்த ஆமைக்கு ஒரு படை மாத்திரம் இருக்கும்போது அதனைத் தண்ணீரில் தள்ளிவிடுவார்கள்.

# பொழுது போக்கும் மனித இயல்பும்

பொழுது போக்கு மனித இயல்பைக் காட்டும் என்கிருர் அமெரிக்க உளவியல் பேராசிரியர் டாக்டர் போல் போயின்ரன்

**கருவியியல்**

கருவிப்பாகங்களைத் தயாரிக்க முயற்சிப்பது, இணைத்துப் பொருத்தி இயக்கி வைப்பது, பகுதிகளைப் பிரித்து ஆய்வது, செப்பனிட முயல்வது போன்றவற்றைப் பொழுது போக்காகக் கொண்டவர்கள், எதையும் எளிதாக எடுத்துக் கொள்ளும் மனப்பான்மையும் வாழ்வை இலேசாகக் கருதும் மனநிலையும், சிறு வெற்றிகளில் பெருமிதம் கொள்ளும் பண்பும் உடையவர்களாய் இருப்பர்.

**நிழற்படம்**

படம் எடுத்தல், படங்களைத் தாமே கழுவிப் பதிப்பித்தல் ஆகிய விடயங்களில் ஈடுபாடு உடையவர்கள் தமது காரியங்களில் கருத்தும் கவனமும் உடையவர்கள் எதற்கும் கவலைப்படார். வாழ்க்கையின் வெற்றி தோல்விகளை ஒரே நோக்குடன்ஏற்றுக்கொள்வர். நம்பிக்கையுடன் பழகலாம்.

**விளையாட்டுக்கள்**

விளையாட்டில் விருப்புடையவர்கள், நற்பண்புகள் கொண்டவர்கள், போட்டி போடும் மனப்பான்மை இருந்தாலும், எளிதில் விட்டுக்கொடுப்பர். வாழ்வை மென்மையாக அனுபவிக்க விரும்புவர். இனிய,

**விஞ்ஞானம்**

சரித்திரம், விஞ்ஞானம், பூமிநூல், வானிலை சம்பந்தப்பட்ட ஆய்வுகளைப் பொழுது போக்காகக் கொண்டவர்கள். பரந்த மனப்பான்மை கொண்டவர்கள் பிறருடைய தவறுகளை எளிதில் மன்னித்து விடுவார்கள்

**சேமிப்புகள்**

முத்திரைகள், நாணயங்கள் போன்றவற்றைச் சேமிக்கும், பொழுது போக்குடையவர்கள் நுட்பமான அறிவும், ஒவ்வொன்றையும் கவனிக்கும் ஆர்வமும், நிதானமான சுபாவமும் கொண்டவர்கள் இனிமையாகப் பேசிப்பழகுவர்

**இசை—இலக்கியம்**

இசையிலும் இலக்கியத்திலும் ஈடுபாடு உடையவர்கள் உணர்ச்சி வசப்பட்டவர்கள். சிறு குறைகளையும் பொறுக்க மாட்டார்கள். எளிதில் கோபமும் துயரமும் அடைவார்கள். தற்பெருமை இருக்கும். ஆனுல் இளகிய மனமும் இருக்கும்.

எளிய உரையாடலில் கலந்து பழகுவர்.

**நாடகம், திரைப்படம்**

ஒதுங்கிவாழும் விருப்பம் கொண்டவர்கள் உண்மையான இன்னல்களையும் இடையூறுகளையும் நம்புவதிலோ ஏற்பதிலோ நாட்டம் இல்லாதவர்கள் வாழ்வின் இனிய பகுதிகளை மட்டும் துய்க்கும் விருப்பு உடையவர்கள். கற்பனைகளிலும், உல்லாசமாக நேரத்தைக் கழிப்பதிலும் நாட்டம் கொண்டவர்கள்.

**ஓவியம்**

நல்ல உழைப்பாளர் கருத்துக்களைவிடக் கவர்ச்சியில் மனதை ஈடுபடுத்தக் கூடியவர்கள் அதிக கற்பனையில் மனம் ஈடுபடுவதால் அதிகம் பேசமாட்டார்கள். பொறுமையும் நிதானமும் இருப்பினும் சோம்பலும் தள்ளிப் போடும் வழக்கமும் கூடவே இருக்கும்.

தகவல்:
**கோகிலா மகேந்திரன்**

### செவ்வாய் தோஷமும் திருமணப்பொருத்தமும்

# இல்வாழ்க்கை சிறப்படைய

# புதுமுறை மணப்பொருத்தம்

[முன் தொடர்ச்சி]

பொருந்தாத கிரகங்களாகிய சனி, செவ்வாய், ராகு, கேது, சூரியன் ஆகிய வீடுகளுக்குரிய காரியங்களுக்குக் கேடுகள் சம்பவிக்கும். முக்கியமாகச் சனியின் தொடர்பு மிகக் கொடியது. ஏனெனில் சனீஸ்வரன் மோட்ச நிலை முத்தியைக் கொடுப்பவர். எப்படி இன்பகரமான இல்வாழ்க்கையைக் கொடுப்பார்? ஆனால் இக்கிரகங்கள் [3], 6], [10], ]11] ஆம் உபச்சய வீடுகளில் உறைந்தால் நன்மை செய்யும் என்றும் தோஷம் தருவதில்லை என்றும் முனிவர்கள் கூறியுள்ளார்கள். கிரகப்பொருத்தம்பற்றிச் சோதிட மாமேதை இராமன் வியாழன், சுக்கிரன், செவ்வாய், சூரியன், சந்திரன் என்பன ஒன்றுக்கொன்று 1, 3, 5, 9, 11 இலிருப்பது உத்தமமென்றும் 4, 7, 10 இலிருப்பது மத்திமம் என்றும் 2, 6, 8, 12 இலிருப்பது பொருந்தா என்றும் கூறியுள்ளார்.

**சரவணையூர் சோதிடர் செ. சிவஞானசம்பந்தன்**

### (3) புதிய முறைத் திருமணப் பொருத்தம் பார்த்தல்

புதிய முறையில் திருமணப் பொருத்தம் பார்த்தல் முறையைப் புகுத்தியவர் நல்லூர் சோதிட ஆய்வாளர் திரு. வே. சின்னத்துரை. ஆணுக்கும், பெண்ணுக்கும் பாலியல் தொடர்பான அம்சம் திருமணப் பொருத்தத்தில் மிக முக்கிய பங்கினை வகிப்பது என்றும் அதற்குரிய கிரகங்கள் சுக்கிரன் செவ்வாய் என்றும் தனது ஆய்வின் முடிவில் தீர்மானித்துள்ளார். அவர் 20 விவாகஞ் செய்த சோடிகளின் ஜாதகங்களை ஆய்வு செய்து கண்ட முடிவே இந்தப் புதிய முறைத் திருமணப்பொருத்தம் பார்த்தலாகும். ''உங்கள் திருமணம்'' என்ற அவருடைய நூலில் மிகத் தெளிவாக உதாரணங்களைக் கொண்டு இம் முறையை விளக்கியுள்ளார்.

இல்வாழ்க்கையின் முக்கிய அம்சங்களுக்கு இடம் கொடுத்து நான்கு தலைப்புகளில் வகுத்துள்ளார். அவையாவன:- 1. கொள்கை அல்லது நட்பு. 2 பாலுணர்வு 3. பிரிவினை. 4. முளையாணி ஏறல்.

### (1) கொள்கை அல்லது நட்பு

ஜென்ம இலக்கினம், சூரியன், சந்திரன் நவாம்ச இலக்கினம் என்பன கொண்டு இது தீர்மானிக்கப்படும் இம்முறையிலும் நவாம்ச நிலைக்கு முக்கிய இடம் கொடுக்கப்படுகிறதை அவதானிக்குக. இதில் ஒருவரின் நவாம்ச இலக்கினம் மற்றவருடைய ஜென்ம இலக்கினமாக அமையுமானாலும்: சூரியன், சந்திரன் திரிகோணம் அல்லது கேந்திரம் ஏறினாலும் கொள்கை நட்பு ஒன்றாக அமையும். இந்த நான்கும் சரிவர அமைந்துவிட்டால் மிகவும் திறமான ஒரே ஒத்த கொள்கையுடையவர்களாகும். இந்நான்கில் ஏதோ ஒன்று நன்கு அமைந்துவிட்டால் கொள்கையும் நட்பும் ஒத்தவராவார்கள். 5/9 திரிகோணம் 1/1; 3/11; திரிகோணத்திற்குச் சமன். இவை ஈர்ப்பு [Sextile] மிகுந்தவை 4/10; 7/7 சகிப்புத்தன்மையானவை [Tolerent] 6/8; 2/12 பிலக்கு [Indifferent] பொருந்தாதவை இதற்கு விதிவிலக்கு[Exception] 6/8; 2/12 தானங்களின் இராசியதிபதிகள் ஒரே கிரகமாயின் அல்லது ஜென்ம நவாம்ச இலக்கினங்களின் அதிபதிகள் ஒரு கிரகமாயினும் அல்லது ஒரே தத்துவமுடையதாயினும் அது ''பிணக்கை' நிவர்த்தியாக்கும்.

### (2) பாலுணர்ச்சி

ஆணுக்கு பாலுணர்ச்சியைக் (Sexual Attraction) கொடுப்பது பெண்கிரகம் சுக்கிரனாவார். பெண்ணுக்குக் கொடுப்பவர் ஆண்கிரகம் செவ்வாயுமாவார். இதன் காரணமாகத்தான் மேலே தரப்பட்டுள்ள திருமணப் பொருத்தம் பார்க்கும் முறைகளிலும்கூட சுக்கிரன் செவ்வாய் இருவரின் நிலைகள் நன்றாக அமையவேண்டுமெனக் கருதப்பட்டுள்ளது இங்கும் இருவரும் திரிகோணம், கேந்திரம் அல்லது செக்ஸ்ரையில்ஸ் எய்தின் ஒருவரை ஒருவர் ஈர்த்துக்கொண்டேயிருப்பர். இங்கும் 6/8; 2/12 நிலைகள் தவிர்க்கப்படல்வேண்டும் அந்தக் கலியாணத்தைத் தவிர்ப்பது மிகநன்று. இதற்கும் விதிவிலக்குண்டு இருவருக்கும் பிணக்கு நிலையாயின் அதற்கு வியாழசுகம் கிட்டுமாயின் அல்லது கலியாண ஸ்தானங்களான 2, 7, 11ஆம் வீடுகள் ஒருவருடையது மற்றவருடைய ஸ்தானம் ஒன்றில் ஆறுமாயின்—படியுமானால் அது உத்தமம் எனக் கொள்ளலாம்.

### (3) பிரிவினை

கொள்கை; பாலுணர்வு இரண்டும் சரியாக அமைந்து திருமணமாகியும் சில காலத்தின்பின் பிரிவினை உண்டாகி விடுவதையும் நாம் வாழ்வில் காண்கின்றோம். எனவே இதன் காரணத்தை அறிந்து இந்நிலை ஏற்படும் நிலையிலுள்ள ஆண் பெண் திருமணத்தைச் சிபார்சு செய்யவேகூடாது. இதற்கு சனியின் நிலையை ஆராயவேண்டும். சனிபகவான் முத்திநிலையைக் கெடுக்கும் ஒரு கிரகமாகும். எனவே அவர் உலகியல் ஆசைகளை, இச்சைகளை, இன்பங்களை அனுபவிக்க விடமாட்டார். மனசுகாரகனாகிய சந்திரனுடன் கூடி உறைந்தால் அல்லது திருஷ்டி பெற்றால் மனசை மாறுபடுத்தி தம்பதிகளைப் பிரித்துவிடுவார். ஆகையால் ஒருவருடைய சனி மற்றவருடைய சந்திரனைத் தாக்கக் கூடாது. தாக்க நேரிட்டால் பிரிவினை வரக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்திவிடும். இதற்கும் விதிவிலக்குண்டு. தாக்கும் சனியையும் சந்திரனையும் இருவரின் அல்லது ஒருவரின் வியாழனின் நற்பார்வை பெற்றால் குறைநீங்கிவிடும்.

### (4) முளையாணி ஏறல்

புதியமுறைத் திருமணப் பொருத்தம் பார்க்கும் முறையில் முளையாணி ஏறல் இரு முறைகளில் பார்க்கப்படுகிறது ஒன்று ஏற்றி வைத்துப் பார்த்தல் (Coincidal மற்றது வண்டிச்சில்லு அல்லது சக்கரமுறை (Cart Wheel Method) இதை ஒன்று புல்கும் முறை [Mugging Method] என்றும் கூறுவார்கள்.

முதலாவது முறையில் அதாவது ஏற்றி வைத்துப் பார்க்கும்போது ஜாதகத்தில் திருமண வீடுகளாகிய 2, 7, 11 ஆகிய மூன்று வீடுகளில் ஏதாவது ஒன்று மூன்று தவ்வுகளில் ஏதாவதொன்றில் புகுந்து கொண்டால் பொருத்தமுண்டாம். மூன்றிலும் புகுந்து கொண்டால் மிகஉத்தமப் பொருத்தமாகும். இரண்டாவது முறையில் ஆண் பெண்ணைத் தழுவுதல் போன்றதாகும். சக்கரத்தின் வெளிவட்டம் ஆணின் ஜாதகம். உள்வட்டம் பெண்ணின் ஜாதகம் வண்டிச் சக்கரத்தின் மேலுள்ள இரும்பு வளையம் சரியான முறையில் அதன் விரிவு சுருக்கத்தன்மைக்கு ஏற்றவாறு பொருத்தப்படாவிடில் வண்டி ஓடும்போது வளையம் கழன்று சக்கரம் நொருங்கிவிடும். வண்டியின் ஓட்டமும் தடைப்படும். இப்பொருத்தம் பார்க்கும் முறையில் [i] இலக்கினம், சூரியன், சந்திரன், நவாம்ச இலக்கினம் என்பவற்றைக் கொண்டு பால் ஈர்ப்பும் [ii] வெள்ளி, செவ்வாய் கொண்டு கொள்கையும் [iii] சனி சந்திரன் கொண்டு பிரிவினையும் [iv] வியாழனைக் கொண்டு வியாழசுகமும் [v] திருமண வீடுகள் 2, 7, 11 கொண்டு முளையாணி ஏறுதல் என்பன தகுந்த முறையில் சரியான முறையில் திருமணப் பொருத்தம் பார்த்துத் தீர்மானித்தல் வேண்டும். அன்றேல் திருமண வாழ்க்கை என்னும் வண்டியில் ஓட்டம் தடைப்பட்டுவிடும். மண வாழ்க்கை முறிந்து பிரிவினை விவாகரத்தில் போய் முடிந்துவிடும். பொதுவாக இம்முறையில் பொருத்தம் பார்ப்பது கிரகப் பொருத்தம் பார்ப்பது போல் அமைந்திருப்பது தெளிவு.

[அடுத்த இதழில் முடியும்]

## தேவாரங்களில்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

செயல் சிவச்செயலானமை போன்ற சிவமுனைப்பாலான சொற்களேயாம். பாண்டிமாதேவியார்க்கு இரங்கிப் பாண்டியனின் வெப்புநோயை நீக்கச் சம்பந்தர் சென்றபோது பாண்டியன் ''தேவரீருடைய ஊர் யாது?'' என்று வினவினன். அதற்கு விடையாகப் பாடிய திருப்பதிகம் 12பாடல்களாலானது. காரணம் சீர்காழிக்குப் 12 பெயரிருத்தலால் ஒரு பெயர்க்கு ஒரு பாடலாகப் 12 பாடல்களில் பதிகம் அமைவதாயிற்று. 12 பெயர்களும் வட்டமாக அமையப் பாடியபடியால் அத்திருப்பதிகம் ''சக்கரமாயிற்று'' எனப் பெயர் பெறலாயிற்று. 2ஆந் திருமுறை 73 ஆம் பதிகமும் சக்கரமாற்று எனப் பெயர் பெற்றது, அன்றியும் அந்தாதி அமைப்புடையதுமாகும் அதிலும் 12 பாடல்களே இறுதிப்பாடல். வழமைபோல் பதிகப்பயன் கூறுகின்றது. அதன் இறுதிப் பகுதியைக் கொண்டு மிக உறுதியாகப் ''பதிகப் பயன்'' கூறும் பாடல்கள் பிறரொருவரால் செய்யப்பட்டு இடையிலே இடைச்செருகலாகச் சேர்க்கப்பட்ட பாடல்களல்ல என்பனதத் தெளியலாம்.

வெள்ளிப்பதிகம் எனத் திருமறைக்காட்டுத் திருப் திகத்தைக் கூறுதற்குச் சான்று ஒன்றும் தெரிந்திலது என ஒளவை துரைச்சாமிப்பிள்ளை எழுதி அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட சைவ இலக்கிய வரலாறு [பக். 63] கூறுகின்றது.

# பிரிவினை கேட்கும் மனித மனம்!

## தத்துவம்

காதலினால் மானிடர்க்குக் கவலை தீரும் என முப்பத்து ஏழாவது வயதிலே பாடினான் பாரதி! இன்னும் பத்து வருடங்கள் வாழ்ந்திருப்பாரானால் தனது காதல் கவிதைகளைப் பார்த்துச் சலித்துக்கொண்டிருப்பார். தனது உடலில் இருந்து பத்தாவது மாதம் விடுதலை பெறும் சிசுவைப் பார்த்துத் தாய் ஆறுதல் அடைகின்றாள். மனிதன் கண்ட முதல் பிரிவினை அதுவே! கடல் கண்டங்களைப் பிரிக்கிறது! ஆறு நிலப்பரப்பைப் பிரிவினை செய்கின்றது. குளங்கள் இடையிலே குறுக்கிடுகின்றன. ஆயினும் இன ஒற்றுமையே பிரிவினைக்கு அப்பால் இவனைஒற்றுமைப்படுத்தியுள்ளது.

முருகக் கடவுள் ஒரு பிரிவினைவாதி. அம்மையையும், அப்பனையும் பிரிந்து முருகப்பெருமான் மலைமீது பிரிந்திருக்கும் காட்சி பிரிவினையே அன்றி வேறென்ன! ஒரு மாம்பழத்திற்காக முருகன் பிரிவினையை ஆதரித்து இருப்பதால்முதல்பொருள்முதல்வாதியாக அவரே காணப்படுகின்றார்! சனநாயகத்தை அராஜகத்துடன் போரிட்டுத்தோற்கடிக்க அவர் ஏந்தி இருக்கும் வேல் பிரிவினைக்கு ஏதுவான ஆயுதப்பேராட்டத்தை ஞாபகப்படுத்துகிறது.

**திக்கவயல் சி. தர்மகுலசிங்கம்**

ஆரியனும், திராவிடனும் மங்கோலியனும் மற்றும் உலகில் உள்ள பிளவுகள் எல்லாம் மனிதன் தன்னைத்தானே பிரிவினை செய்ததன் சரித்திரம்! வெள்ளையனும், கறுப்பனும் ஒரே தவறணையில் மது அருந்தலாம். ஆனால் போதை முறிந்த போது தமது நிறப்பிரிவினையை நினைத்தே பிரிந்து போவார்கள்! ஒரே மதத்தைக் கொண்ட இஸ்லாமியரான பாகிஸ்தான் மக்கள் கிழக்கு என்றும் மேற்கு என்றும் சண்டையிட்டனர். படுகொலை செய்யப்பட்டவர்கள் 20 லட்சம்! ஆனால் இன்றோ கிழக்கு வங்காள அதிபர் மேற்குப் பாகிஸ்தான் சென்று ஒரேயணியில் திரண்டு நிற்கின்றனர் பாவம் இந்தியா. உதவி செய்த கரங்கள் அயலவனைப் பிரிந்து நிற்கின்றது.

**பிளவுபட்ட இலங்கை**

இலங்கைத் தீவுக்கும் பிரிவினைத்தோஷம் உண்டு. தமிழ-சிங்களவர் போராட்டத்தை நாம் குறிப்பிடவில்லை. தாய் தந்தையரால் பிரித்துவிடப்பட்ட விஜயனும் நாட்டில் இருந்து பிரித்துவிடப்பட்ட அவனின் 500 தோழர்களும் குடியேறிய பிரிவினைப் பூமியே இது.

அவர்கள் இங்கு குடியேறிய போது மனிதர்கள் இயக்கர்கள் என்றும் நாகர்கள் என்றும் பிளவுபட்டு வாழ்ந்தனர். அதன் பின்பு ராஜரட்டை, மாயரட்டை றுகுணரட்டை எனவும் மூன்றாகப் பிரிந்தது. உலகம் முழுவதும் இதேநிலைதான்.

**நிறப்போராட்டத்தால் பிரிவினை**

இரண்டாம் உலக யுத்தத்தை ஆரம்பித்ததே ஜெர்மனிதான்! பழியைச் சுமக்க வேண்டிய ஜேர்மனிமீது அமெரிக்கா அணுகுண்டை வீசவில்லை. தமது இனத்துக்கு நேர் எதிரான கீழ்த் திசையில் யப்பான் மீது அணுகுண்டு விழுந்தது. உலகம் அழியும் போதும் நிறத்துவேஷம் தலைதூக்கி நிற்கும் என்பதற்கு இதைவிட வேறென்ன உதாரணம் வேண்டும்?

**உலகியல் வாழ்விலே பிரிவினை**

தாயின் மடியிலே வளரும் குழந்தை அவள் இறந்த வீட்டுக்கு வர மறுக்கின்றது. சொத்தினைச் சகோதரர்கட்கு இடையிலே பங்குபோட்டது பிழையெனக் காரணம் சொல்கின்றது. அவள் தமக்கு அளந்துபாலூட்டவில்லை'என்ற தத்துவத்தை மறந்துவிடுகின்றார்கள். சீலைய உரித்துக்காட்டி மருமகனுக்குச் சீதனம் எழுதும் கொடுமை பிரிவினையைவிடக் கொடுமையானது! மனித இனம் அன்றி வேறு யார் தான் இதற்குச் சொந்தம்?

இதனை அளவிட்டே பண்டைய இத்தாலியின் சாணக்கிய எழுத்தாளரான மாக்கியவல்லி ''தந்தையைக் கொன்றவனை மகன் மன்னிப்பான்; சொத்துக்களைக் கொள்ளையடித்தவனை மன்னிக்கமாட்டான் எனச் சொல்லி வைத்தான்! நடோடிப் பாட்டிலே நாலணா உழைக்க முடியும் என்றால் அதற்கும் உறவு பாராட்டப் பலரும் வருவார்கள். நல்லாக வாழ்ந்தவன் நடுறோட்டுக்கு வந்தால் உதவி செய்ய எவருமே வரமாட்டார்கள். தாயும் பிள்ளையும் ஒன்று என்றாலும் வாயும் வயிறும் வேறு என்பதும் பிரிவினையின் அடிநாதமே?

**கவிஞர்கள் கண்ட பிரிவினை**

கவிஞர்கள் பிரிவினையில் சுகம் கண்டோரே! இரண்டு மனம் வேண்டுமாம்;- கவிஞர் கண்ணதாசன் பாடுகின்றார். ஒன்று நினைத்து வாழ; மற்றது மறந்து வாழ!! கவிதை சிந்தனையைப் பிரிவினை செய்துள்ளது.

காணிநிலம்வேண்டும் என்று பாடிய பாரதி பக்கத்தே பத்துப் பன்னிரண்டு தென்னை மரங்களும் வேண்டுகின்றார். வீட்டையும், இயற்கையையும் பிரிவினை செய்யும் கவிதையே இது! ஆயினும் மகத்தான கவிஞர்களின் சிந்தனைகளும் பிரிவினை வரும்போது சிதறுண்டுபோகும்?

சிந்து நதியின் மிசை நிலவினிலே சேர நன்னாட்டிளம் பெண்களுடனே எனப்பாடிய பாரதியின் பாட்டுக்கள் ஒரு நோக்கில் பார்த்தால் காலாவதியாகிவிட்டது!

காரணம் சிந்து இப்போது பாகிஸ்தான்ன் உரிமை!

நமோ... நமோ... தாயே நய ஸ்ரீலங்கா நாளை பிரிவினை ஏற்பட்டால...?

## பிரயாண ஒழுங்குகள்

- கனடா
- ஜேர்மனி
- பிரான்ஸ்
- கொலண்ட்
- பெல்ஜியம்
- டென்மார்க்
- சுவீடன்
- ஸ்பெயின்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், பொண்ட் (BOND), விஸா, ரிக்கற் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

உடன் தொடர்புகொள்ளவும்

**INTERSUN GROUP,**

சின்னத்தம்பி அவெனியூ,
(மகளிர் கல்லூரி அருகாமை)
மானிப்பாய். [A-1029]

---

புதிய விஞ்ஞான மாணவர்களுக்கான கணனி வகுப்புக்கள் தொடக்கம்

இவ்வருட யாழ் பல்கலைக்கழக புதிய விஞ்ஞான மாணவர்களுக்கான ஆரம்ப கணனி (Introductory Computer Programming) வகுப்புக்கள் வரும் புரட்டாதி மாதம் 10ம் திகதி பிற்பகல் 2-00 மணிக்கு கணித/புள்ளிவிபரவியல் துறைப் பகுதியில் நடைபெறும் என்பதனை தெரிவித்துக்கொள்கின்றோம்.

பதிவாளர்.

(A 1238) 02-09-86

---



## ஆவணி விநாயகர் சதுர்த்தி

பாலுந் தெளி தேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்து தூமணியே நீ எனக்கு
சங்கத் தமிழ் மூன்றும் தா.

— ஔவையார்

10 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி ஓர் அழகிய விநாயகர் ஸ்ரிக்கரைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற்-யாழ்ப்பாணம்**


(A-1314)


---

அசல் **EVEREADY®**

# எவரெடி பூனையை இனம் கண்டால் பரிசு

# ரூபா.100,000!



# மேலும் மாதாந்தம் 100 எனஜைஸர் விளக்குகள்!

இதோ! எவரெடி ஹெவி டியூட்டி பட்டரிகளை வாங்குவோருக்கு மாபெரும் பரிசுத் திட்டம்:

இதுமிகவும் சுலபமான போட்டி. இவ்விளம்பரத்திலுள்ள ஒன்பது பூனைகளையும் நன்றாக அவதானியுங்கள். இவற்றுள் எட்டுப்பூனைகள், எவரெடி பட்டரியில் காணப்படும் எவரெடி பூனையைவிட, வித்தியாசமாக உள்ளன. ஆனால் ஒரேயொரு பூனை மாத்திரம் அசல் ''எவரெடி பூனை'' ஆகும்.

அதனைச் சரியாக இனம் கண்டுபிடிக்கும் அதிர்ஷ்டசாலிக்குரிய பரிசு ரூபா 100,000!

மேலும் 300 எனஜைஸர் விளக்குகள் !!

போட்டி முடிவு திகதி 1986 நவம்பர் 30.

பரிசை வெல்ல நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

இதில் காணப்படும் பிரவேசக் கூப்பனை நிரப்புங்கள். எவரெடி ஹெவி டியூட்டி பட்டரிகளை இணைத்துச் சுற்றியுள்ள பொலித்தீன் உறைக்குள் காணப்படும் ''வெல்லுங்கள் ரூபா 100,000/-'' என்ற சொற்கள் அடங்கிய துண்டை கூப்பனில் குறிப்பிட்ட இடத்தில் ஒட்டியபின், எவரெடி, த. பெ. இல. 1477, கொழும்பு என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

ஒருவர் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் அனுப்பலாம், ஆனால் ஒவ்வொரு கூப்பனிலும் ''வெல்லுங்கள் ரூபா 100,000'' என்ற சொற்களடங்கிய துண்டு ஒட்டப்பட்டிருக்கவேண்டும்.

பரிசுக் குலுக்கலும் பரிசுகளும்

100 எனஜைஸர் விளக்குப் பரிசுகளுக்கான குலுக்கல் முறையே செப்ரெம்பர் 30, ஒக்டோபர் 31, டிசம்பர் 1 ஆகிய திகதிகளில் இடம்பெறும். இதில் மொத்தமாக 300 விளக்குப் பரிசுகள் உண்டு.

மாபெரும் ஜாக்பொட் பரிசுத்தொகை 100,000 ரூபாவுக்கான குலுக்கல் டிசம்பர் 1ந் திகதியன்று நடைபெறும்.

நீங்கள் அனுப்பும் போட்டிக் கூப்பன்கள் ஒவ்வொரு பரிசுக் குலுக்கலுக்கும் சேர்த்துக் கொள்ளப்படும் என்பதனால் ஒன்றுக்கு மேற்பட்ட பரிசுகளை நீங்கள் வெல்லமுடியும். பரிசுபெற்றோர் விபரம் புதினத்தாள்களில் பிரசுரிக்கப்படும்.

தாமதிக்காதீர்கள். - போட்டிக் கூப்பன்களை அனுப்பத் தொடங்குங்கள்!

யூனியன் காபைட் சிலோன் லிமிடெட், பீனிக்ஸ் அட்வடைசிங் சேவிசஸ் ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்களும் அவர்களின் குடும்பத்தவர்களும் இப்போட்டியில் பங்குபற்ற அருகதையற்றவர்கள்.

எவரெடி பூனை இனம் கண்டுபிடிக்கும் போட்டிக் கூப்பன்

அசல் எவரெடி பூனையின் இல: ☐

பெயர்: ____________

விலாசம்: ____________

பட்டரி வாங்கிய கடைகாரரின் பெயரும் விலாசமும்: ____________

துண்டை இங்கு ஒட்டுக

Licence No.S/533




# உலகோர் நாடி வாங்குவது எவரெடி

Phoenix

## VACANCY
## for Circular Knitting Machine Operator

KNITTING மெசினில் இயக்குநராக வேலைசெய்யக் கூடிய இரண்டு அல்லது மூன்றுவருட அனுபவமுள்ள OPERATOR உடனடியாகத் தேவை. நற்சாட்சிப்பத் திரங்களுடன் நேரில் வரவும்.

**நிற்வெயர் லிமிட்டட்,**
(V. C. முன்பாக)
2, அதிகார் ஒழுங்கை, கோப்பாய்.

[C-4437]

---

JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE,
VADDUKODDAI.

## COMPUTER PROGRAMMING
### Basic Language

Duration: 3 months (150 hours)
Commencing on 15-09-1986
Monday - Friday (9-00 — 12-00a m.) only

Qualification: Students of either sex, below 24 years old, Passed G. C. E (O/L) with credit passes in Maths, English, and Science can apply.

Course fee: Rs. 1,500/- pay on registration.

Call at office with Birth, Educational and character certificates during working hours before 12-09-86 for interview and selection.

DIRECTOR.

(A-1242)

---

## பிரயாண ஒழுங்குகள்

★ ஈராக்:- (ஆஸ்பத்திரி கிளீனேஸ்)
(ஈராக்குக்கு ஒரு மாதத்துக்குள் பயணம்செய்யலாம்)
★ லிபியா:- (ஒயில் கொம்பனி வேக்கேஸ்)
★ சவூதி அரேபியா:-(ஆஸ்பத்திரி, விமான நிலைய கிளீனேஸ்)
★ சவூதி அரேபியா:-(பூங்காவேலையாட்கள்)
★ லெபனுன்:- (லேபறேஸ்)
★ குவைத்:- (கிளீனேஸ்)
★ குவைத்:- (வீட்டுப் பணிப் பெண்கள்)
★ சிங்கப்பூர்:- (வீட்டுப் பணிப்பெண்கள்)
★ குவைத்:- (பெண் ஆஸ்பத்திரி கிளீனேஸ்)

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்குச் செல்ல விரும்புவோர் உடனடியாக பாஸ்போட், 7 படம் மற்றும் ஆவணங்களுடன் நேரில் வந்து தொடர்புகொள்ளவும்.

**டாக்டர் கே. எஸ். பரம்சோதிநாதர்**
பிரசாந்தி வைத்திய நிலையம்,
கற்பகப்பிள்ளையார் கோவிலடி,
உடுவில் கிழக்கு, உடுவில்.

பி. கு:- இணுவில் ஆஸ்பத்திரிக்கு முன் ஒழுங்கையால் வரவும்.

(A 1080)

---

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ டென்மார்க்
★ ஜேர்மன் ★ பிரான்ஸ்

ஆகிய நாடுகளுக்கு கொழும்பில் இருந்து நேரடிப் பிரயாணம் மேற்கொள்ள அரிய வாய்ப்பு. செல்ல விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.

எதிர்வரும் 15-ம் திகதி அழைத்துச் செல்ல இருப்பதால் 15-ம் திகதிக்கு முன் பதிவுசெய்து கொள்ளவும்.

குவைத், அபுதாபி, சவூதிஅரேபியா ஆகிய நாடுகளுக்கு வருமானம் பெற ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் பாஸ்போட் பொண்ட், டிக்கட் என்பன செய்து கொடுக்கப்படும்

## GROUP ATLANTIC
(சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக)
163, Hospital Road, Jaffna.

(A 1065)

---

## கோவில் அறங்காவலர் மறுப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு நல்லூர்கந்தசுவாமி கோவில் ரதோற்சவத்தன்று காலை தங் கச்சங்கிலி யொன்று மாணவி ஒருவரால் கண்டெடுக்கப் படடு கோவில் அறங்காவலரிடம் ஒப்படைக்கப்பட்டது என்ற செய்தி குறித்து மேற்படி கோவில் அறங்காவலர் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

---

## இவ்வாரம் எப்படி?

### இன்று

மாதம்: ஆவணி
திகதி: 22 (1986-09-7)
கிழமை: ஞாயிறு
திதி: திருதியை
மு.ப. வரை
நக்ஷத்திரம்: சித்திரை
பி.இ. வரை

### மேடம்

வாழ்க்கையில் தென்றல் வீசும் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். மகிழ்ச்சிகரமான சம்பவங்களும் இடம்பெறும். நீண்ட நாள் கனவும் நனவாகும். காதலர் வாழ்வில் பிணைப்புகள் இறுகும்.

### இடபம்

பணத்தைக் கொடுத்துப் பகையைச்சம் பாதித்துக் கொள்வீர்கள். தொழிற் துறையில் சோர்வு தென்படும் நண்பர்கள் மூலம் புதிய தொல்லைகள் தோன்றக் கூடும். நிதானப் புத்தியுடன் நடந்து கொள்வது நன்று.

### மிதுனம்

இரக்க சிந்தை மேலிடும். பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். பெரிய இடத்துத் தொடர்புகளும் ஏற்படும். புதிய முயற்சிகளும் கைகூட இடமுண்டு.

### கடகம்

சிநேகிதர் மூலம் வரவுண்டு. புதிய கண்டுபிடிப்புகளும் இடம் பெறும். பொறியியலாளர்களுக்குச் சிறப்புண்டு செய் தொழில் சிறப் டைவதற்கும் இடமுண்டு.

### சிங்கம்

பொருளாதார நிலை சீரடையும். எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு. நிதி நிலையில் விரும்பத் தக்க முன்னேற்றம் காணப்படும். வணிகர்களுக்கு ஆதாயமுண்டு.

### கன்னி

குடும்பத்தில் சிறிய பூசல் தோன்றி மறையும். மனதில் அமைதி குன்றும். விஷமிகள் புனைந்துரைகளால் ஆத்திரம் அதிகரிக்கும். அதிகாரப் போதையில் தவறுகளும் நடக்கலாம்.

### துலாம்

தொழில் நஷ்டமடையக் கூடும். இடப் பிரிவும் உண்டு. உடல் சுகாதாரம் வேண்டும் மனதிலும் அமைதி நிலை நிற்காது. திடீர் முடிவுகளைத் தவிர்த்துக் கொள்ளவும்.

### விருச்சிகம்

பிரச்னைகள் பல நல்ல முடிவைத் தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பேச்சில் நிதானம் பெருமையைத் தேடித் தரும். பண முடக்கந் தீரும். இன பந்துக்கள் ஆதரவும் உண்டு.

### தனுசு

முன்னேற்றமான காரியங்களில் எதிர்பாராத தடைகள் ஏற்படலாம். சகோதர

[11-ம் பக்கம் பார்க்க]

---

## New Master Institute
BMC Lane, Jaffna.

## 87 A/L DAY CLASS

ஆரம்பம்:
**10-09-86** புதன் காலை 8-30

(எமது வழமையான ஆசிரியர் குழுவினால்)

(A 1312)

---

## ஆரம்பமாகின்றது A/L 87

பகல்நேர தூய, பிரயோக கணித வகுப்புக்கள்

ஆசிரியர்: பிரேம்நாத்

குறிப்பு; கடந்த காலங்களில் மிக குறுகிய காலத்தில் முழு பாடத்திட்டங்களையும் விரிவாக முடித்தமை குறிப்பிடத்தக்கது. மேலும் விபரங்களுக்கு நேரில்,

3-ம் குறுக்குத் தெரு, (PMC முன்பாக),
யாழ்ப்பாணம்.

[C 4464]

---

## பிரயாண ஒழுங்கு

★ கனடா ★ டென்மார்க்
★ பிரான்ஸ் ★ இத்தாலி

ஆகிய நாடுகளிற்கு எமது பிரதிநிதி எதிர்வரும் 15ம் திகதி இங்கிருந்து அழைத்துச் செல்ல உள்ளார்.

உங்கள் கடவுச் சீட்டுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

மற்றும் பாஸ்போட், பொண்ட், விசா, ரிக்கற் ஆகியவற்றிற்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**"லிப்ருஸ் றவல்ஸ்"**
ஆர். வி. ஜி. கட்டிடம்
70, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(A 131[illegible]

---

## கேள்வி அறிவித்தல்
### யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபையால் 1986ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இருபத்திநான்காம் திகதி (24-09-86) பிற்பகல் 2-15 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைகட்கும் எதிரேயுள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு கட்டிட வேலைகள் செய்வதற்கென கல்வித் திணைக்களம், கட்டுவேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டிடத் திணைக்களம், உள்ளூராட்சித் திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவுசெய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1986ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 22ம் திகதி பி ப 2-00 மணிவரை (22-09-86) மீளளிக்கப்படாதசேள்விப்பத்திரப்பணமாக ரூபா 50/-ம் (ஐம்பது) மீளளிக்கப்படும் கேள்விவைப்புப்பணமாக ரூபா 250/-ம் (இருநூற்றி ஐம்பது) செலுத்தியதின்பேரில் கேள்விப் பத்திரங்கள் யாழ் அபிவிருத்திச்சபை தலைமை அலுவலகத்தில் (கச்சேரி) வழங்கப்படும். கேள்விப்பத்திரப்பணம், கேள்வி வைப்புப்பணமாகியனகாசுக்கட்டளையாகவோ அல்லது வங்கிக்கட்டளையாகவோ செலுத்தப்படவேண்டும்.

கேள்விகள் 1986ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 24ம் திகதி (24-09-86) பிற்பகல் 2-30 மணிக்கு யாழ் அபிவிருத்திச்சபை தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ் அபிவிருத்திச்சபை தலைமை அலுவலகத்தில் அல்லது யாழ் கல்வித்திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வை. மு. பஞ்சலிங்கம்,
மாவட்டச் செயலாளரும்,
அரசாங்க அதிபரும்,
யாழ்.மாவட்டம்.

அபிவிருத்திச்சபை அலுவலகம்,
செயலகம், யாழ்ப்பாணம்.
1986-09-03.

| பாடசாலையின் பெயர் | விபரம் | பதிவுசெய்திருக்க வேண்டியதொகை |
|---|---|---|
| யாழ் சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை | பாடசாலைக் கட்டிடம் 100'-0''X20'-0'' | 200,000-00 |

[A 1240]

## விற்பனைக்கு

அம்பனைச் சந்தியில் இயங்கும் பிரகஸ்பதி வைத்திசாலையுடன் ஒருபரப்ப, 17 5/16 குழியில் அமைந்த காணி கிணற்றுடன் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. சிற்றம்பலம், பன்னலை [C-4406]

## கல்வி

G. C. E. [O/L] இல் கட்டாய பாடமாகிய கணிதத்தில் சித்தியெய்தாதவர்களுக்கும், ஆரம்ப அறிவில்லாதவர்களுக்கும் [17 வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்கு நுணுக்கமான முறையில் வீடுகளிற் சென்று கற்பிக்கப்படும்.

மற்றும் 5 இலிருந்து [O/L), (A/L) சகல பாடங்களும் பயிற்றப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களினால் கற்பிக்கப்படும். காலை 8-30 மணிக்குள் வீட்டிற் சந்திக்கவும் அல்லது கடிதத் தொடர்பு செய்யவும். ஆறுமுகநாதன், 10, கச்சேரிகிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குழி. (C-4222)

## தவறிவிட்டது

செல்வி. திருக்குமாரி கந்தசுவாமி என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுப்பவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைத்து சன்மானம் பெற்றுக்கொள்ளவும். No. 5359 3812-OX, விலாசம், நல்லையா கணேசலிங்கம், முகாமையாளர், கிராமிய வங்கி, உரும்பிராய். [C-4489]

## 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி
கெங்கநாயகி
மார்க்கண்டு
(ஆசிரியை)

மலர்வு: [31-01-1923
உதிர்வு: 09-08-1986
திதி: 08-09-1986

அன்பின் குடும்பத் தலைவியாய் பண்பின் சிகரமாய் இருந்து எம்மை வாழவைத்து இறைவனடி சேர்ந்ததையிட்டு அன்னாரின் ஆத்மசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் சபிண்டீகர அழைப்பு 08-09-1986 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணவன், மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பெரிய அரசடி,
சாவகச்சேரி. C 4490

## 2 வது பிறந்ததினம்



செல்வி
கிரிஜா செல்வரட்ணம்

கந்தரோடை காசியர் தோட்டத்தை சேர்ந்த செல்வரட்ணம் ஜெயவதனி தம்பதிகளின் செல்வப்புதல்வி கிரிஜா தனது இரண்டாவது பிறந்த தினத்தை இன்று (07-09-86) ல் கொண்டாடுகிறார். இவரை பல்கலையும் பெற்று நீடூழி வாழ அப்பா, அம்மா, மானிப்பாயைச்சேர்ந்த அப்பப்பா, அப்பம்மா ஐயா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா. அக்கைமார், மாமாமார், சித்திமார், அனைவரும் வாழ்த்துகின்றனர் (C 4467)

## 4 வது ஆண்டு நினைவஞ்சலி



பொன்னையா
தயாபரன்
B. Sc Eng [Cey]
M. I. C. E [Lon].
Dip in Sanitary Eng-
[Nertherland]
[பிரதம நிர்மாணப் பொறியியலாளர் கட்டிடத் திணைக்களம் கொழும்பு]

தோற்றம்: 16-8-1936
மறைவு: 7-9-1982

நெறிதரு வாழ்வு வாழ்ந்தாய் நேசமே எம்பால் வைத்தாய் பொறி இயலாளனாய் புவியெல்லாம் போற்ற வாழ்ந்தாய் சிறுபொழுதேனும் எம்மைச் செகத்திடப் பிரியா நீயோ உறுதுயர் கடலுள் மூழ்க எவ்விதம் பிரிந்தாய் ஐயா
ஐய நின் பொன்னடிகளுக்கு எமது கண்ணீர் அஞ்சலி.

மனைவி பிள்ளைகள்
"பரன்"
166 முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
(C 4487)

## எமது உதவி.:.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டிய திரு. ராஜீவ்காந்தி இது விடயத்தில் இலங்கை அரசு எதனை விரும்புகிறது என்பது தெளிவாகப் புரியவில்லை என்றும்கூறினார்.

அப்பாவித் தமிழ் மக்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டு வருவது குறித்து தமது பலத்த கண்டனத்தைத் தெரிவித்த திரு ராஜீவ் இலங்கை பந்தோபஸ்த்துப் படையினரின் கட்டுப்பாடற்ற நிலைமையினாலே இந்தக் கொலைச் சம்பவங்கள் நடைபெற்று வருவதாகவும் கூறினார்.

தொடர்ந்து அங்கு பதிலளித்த திரு ராஜீவ் காந்தி சுமார் 1 லட்சத்து 30 ஆயிரம் அகதிகள் இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார்கள் இலங்கையில் சகஜ நிலைமை ஏற்படாத வரையில் அவர்கள் எவ்விதத்திலும் நாடுதிரும்ப முடியாது எனவும் கூறினார்.

"இலங்கைத் தமிழ்ப் போராளிகளின் எந்தவொரு முகாமாவது இந்தியாவில் இல்லை. இதேவேளை இந்தியா சென்றுவர எவருக்கும் எவ்வித தடையும் விதிக்கப்படவுமில்லை விரும்பிய எவரும் இந்தியா வந்து பார்வையிட்டு போராளிகளின் முகாம்கள் அங்கு இருப்பதாக எனக்கு அறிவித்தால் அவைகளை மூடிவிட நான் தயாராகவுள்ளேன் எனவும் பிரதமர் ராஜீவ் கூறினார். [ரா]

## இவ்வாரம்...

(10ம் பக்கத் தொடர்ச்சி)

வழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு. பூமிப் பிணக்குகளைத் தவிர்த்துக் கொள்ளவும். புதிய பணிகளில் தாமதம் தென்படும்.

### மகரம்

தாய் வழித் தன வரவுக்கும் இட உண்டு. குடும்பத்தில் திருப்திகரமான சூழ்நிலை தென்படும். கல்வித் துறையில் அதிக ஆர்வம் பிறக்கும் ஆசிரியர்கள் போற்றப்படுவார்கள்.

### கும்பம்

கற்கண்டு போல் இனிக்கும் வாழ்க்கை. புத்திர வழியாலும் சிறப்புண்டு. வித்தையில் விடா முயற்சி நன்று விவாகழியின் மூலம் கன தனம் இடம்பெறும்.

### மீனம்

வாய்வுக் கோளாறுக்கு இடம் உண்டு. உணவு விடயத்தில் சுகாதாரம் வேண்டும் போக்குவரத்திலும் கவனம் வேண்டும். பொருள் தவற இடமுண்டு. விழிப்புடன் இருக்கவும்.

திருமலை
க.வே.ரவீந்திரன்

லிடோ
10-30, 2-30, 6-30
சிவாஜி கணேசன்
மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(புதிய பிரதி)

வெலிங்டன்
10-30 2-30 6-30
தியாகராஜன்
சில்க் சுமிதா
ஜெய்சங்கர்—பானுசந்தர்
நடித்த
நீங்கள் கேட்டவை
(கலர்) புதிய பிரதி

## இடமாற்றம்
## சின்கோ

எமது ஸ்தாபனம் பரந்தன் கண்டிவீதியிலுள்ள சிவன் மோட்டோர்ஸ் கட்டிடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதென்பதை வாடிக்கையாளருக்கு தாழ்மையுடன் அறிவிக்கின்றோம்.

உரிமையாளர்.

[C 4478]

## மிது வீடியோ மூவிசாரின்

புதிய வெளியீடு
மோகன், ரஜினி நடித்த
பாரு பாரு பட்டணம் பாரு
V. G. P. ஒரிஜினல்

## மிது வீடியோ மூவீஸ்

பிரதான வீதி, சித்தன்கேணி.
(A 1247)

## எமது இன்றைய புதிய வெளியீடுகள்

1. மோகன், ரஞ்சனி நடித்த
பாரு பாரு பட்டணம் பார்
(தரமான பிரதி)
2. மௌனராகம் (ORIGINAL)
3. எம். ஜி. ஆர். பானுமதி நடித்த
தாய்க்குப்பின் தாரம் (ORIGINAL)
4. உனக்காகவே வாழ்கிறேன்
(ORIGINAL)

## வீடியோ பிரசாத்

இல. 424, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
(A 1246)

## பிரயாண ஒழுங்குகள்

சிங்கப்பூர், குவைத், சவுதிஅரேபியா ஓமான்
ஆகயநாடுகளுக்கு
HOUSEMAID, DRIVERS, LABOURERS
உடனடியாகத் தேவைப்படுகிறது
டென்மார்க் செல்பவர்களுக்கும் உடனடி ஒழுங்கு மேற்கொள்ளப்படும்.
10-09-1986க்கு முன்னர் பாஸ்போட்டுடன்
நேரில் வரவும்
பாஸ்போட், பொன்ட், ரிக்கற்றிங்
ஆகியனவும் உடனடியாக செய்து கொடுக்கப்படும்

## Man Power & Travel Cansaltant

533, STANLEY ROAD, JAFFNA [C 4486]
(ர. சாவின தோட்டச் சந்தி)




A (1047)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
ஞாயிற்றுக்கிழமை 7-9-86

✯ நவசமசமாஜக் கட்சியின் நீர்கொழும்புக் கூட்டத்தில் குண்டு வீச்சு!

# இது இனவாத, பாஸிஸ சக்திகளின் பயங்கர தந்திரோபாயம்

-கட்சி பொது செயலாளர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"நீர்கொழும்பு நகரில் நடைபெற்ற நவசமசமாஜக் கட்சியின்கூட்டத்தில்பலபாரிய பட்டாசுகளும் பற்றறி பொருத்தப்பட்ட குணடொன்றும் வீசப்பட்டது. இக் கூட்டத்தைக் குழப்புவதற்காகவும் ந. ச. ச. கட்சித் தலைவர்களைக் காயப்படுத்தவுமே இச் செயல் மேற்கொள்ளப்பட்டது."

நீர்கொழும்பில் கடந்த மாதம் 30ம் திகதி நவசமசமாஜக் கட்சியால் நடாத்தப்பட்ட கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சம்பவம்பற்றி இக் கட்சியின் பொதுச் செயலாளர் விடுத்துள்ள பத்திரிகை அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது

இவ்வாறான ஒரு பலாத்கார சம்பவத்தை இனவாதிகள் மேற் கொண்டதையடுத்து இக் கூட்டத்தை ஒழுங்கு செய்தவர்கள் மத்தியில் வெறுப்புணர்ச்சியைத் தோற்றுவித்திருந்தது எனினும்குறிப்பிட்டபடி கூட்டம்தொடர்ந்து நடைபெற்றது. கூட்டத்தில் பங்குபற்றியவர்களும் வெளியேறாது பேச்சாளர்களின் உரையைக் கேட்டனர்.

இச்சம்பவம் இனவாத பாஸிஸ சக்திகள் இடதுசாரிகளின் பாரிய அளவிலான இயக்கத்தைக் குழப்புவதற்கு மேற்கொள்ளும் பயங்கர தந்திரோபாயமென்ற எமது கருத்தை மீண்டும் ஊர்ஜிதம் செய்கிறது.

## உணவு முத்திரை வழங்கப்படுகிறது

நெல்லியடி, சனி

அரசின் கடல் வலயப் பிரகடனத்தால் பாதிக்கப்பட்டுள்ள பருத்தித்துறை கிழக்குப் பகுதிகளில் உள்ள கடற்றொழிலாளர் குடும்பங்களுக்கு உணவு முத்திரை வழங்கப்பட்டு வருகிறது. மூளியான் பகுதியில் கிராம சேவக அலுவலக காரியாலயத்தில் கடந்த வாரம் உணவு முத்திரைகள் வழங்கப்பட்டன.

முத்திரை பெறத் தகுதியிருந்தும் தவற விட்டவர்கள் உடனடியாகப் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளனர்.

## இறந்ததாக—


(1ம்-பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக் கரையை அண்மித்தபோது மாதகலுக்கு வடக்கே கோகிலான் முனைக்கு அப்பால் ரோந்து சென்ற கடற்படையினர் தாக்கிச் சேதப்படுத்தியதாகவும், அதில் வெளிநாட்டவர் ஒருவர் உட்பட ஏழு தீவிரவாதிகளுடன் படகு மூழ்டிக்கப்பட்டதாகவும் ஏறகனவே அரசு அறிவித்திருந்தது தெரிந்ததே. [வா]

## மரண அறிவித்தல்

வைத்திலிங்கம் ஜீவானந்தன்
(வேங்கை சுதர்சன்)

மலர்வு:
21- 03- 1963



உதிர்வு:
03- 09- 1986

புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த வைத்திலிங்கம் ஜீவானந்தன் வீரமரணம் எய்தினர் இவர் யாழ் மத்திய கல்லூரி பழைய மாணவனும், காலஞ்சென்ற இ வைத்திலிங்கம் (மேல் நீதிமன்ற எழுதுவினைஞர்), சத்தியபாமா தம்பதிகளின் அன்பு மகனும், யுகானந்தன் [சவூதி அரேபியா], பரமானந்தி, தமயந்தி [வயாவிளான் ம ம வி] ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குடும்பத்தினர்,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

[C-4483]

### கணபதிப்பிள்ளை நடேசர்

சுதுமலை வடக்கைச் சேர்ந்த முன்னாள் கல்டெக்ஸ் நிறுவன யாழ். முகாமையாளரும், பெற்றோலியக் கூட்டுத்தாபன கிளிநொச்சிக் கிளை முகாமையாளரும், யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆங்கில ஆசிரியருமாகிய கணபதிப்பிள்ளை நடேசர் 5- 9- 86 அன்று சிவபதமடைந்துவிட்டார், அன்னார் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், சிவஞானசுந்தரம் [விமான நிலையம், அபுதாபி], திருமதி சிவகாம்பிகை பாலேந்திரா, சிவயோகசுந்தரம் (யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம்), கமலாம்பிகை நிர்மால்பிரிண்டேர்ஸ்.கொழும்பு], ராஜேஸ்வரி, சிவராஜசுந்தரம் [கிறுன்ஸ்கவுஸ். கொழும்பு) ஆகியோரின் அன்புத்தந்தையும், ஜெ பாலேந்திரா (A. M. C. முல்லைத்தீவு), திருமதி லக்ஷ்மி சிவாஞானசுந்தரம் (அபுதாபி), திருமதி எஸ்தர் சிவயோகசுந்தரம் ஆகியோரின் அன்பு மாமனாரும்' சிவசுரேஷ், சுரேஷினி, சிவநரேந்திரன், குமரன் ஆகியோரின் அருமைப் பேரனும் பேரம்பலம் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் சகோதரரும், மதியாபரணம், செல்லம்மா [மலேசியா], நவரத்தினசிங்கம் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 7- 9 -86 இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

[C 4479) தகவல்: ஜெ. பாலேந்திரா.

## பாடசாலை நேரங்களில் 'ஷெல்' தாக்குதல் இல்லை
### கோட்டை இராணுவ அதிகாரி உறுதி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாமிலிருந்து பாடசாலை நடைபெறும் நாட்களில் காலை 7 மணியிலிருந்து மாலை 3 மணிவரை ஷெல் தாக்குதல் நடாத்தப்படமாட்டாது, என்று நேற்று முன் தினம் தம்மைச் சந்தித்த கல்விப் பணிப்பாளர் தலைமையிலான குழுவினரிடம் கோட்டை இராணுவ முகாம் அதிகாரி உறுதியளித்துள்ளார்.

யாழ். மத்திய கல்லூரியும், யாழ் வேம்படி மகளிர் கல்லூரியும் வழமையான முறையில் ஒழுங்காக நடைபெறுவதற்கு யாழ் கோட்டை இராணுவத்தினரின் ஷெல் தாக்குதல் இடையூறாக இருப்பதனால் இதுபற்றி கோட்டையிலுள்ள இராணுவ அதிகாரியைச் சந்தித்துப் பேசிக் கொள்வதற்காகவே யாழ். கல்விப் பணிப்பாளர் இரா. சுநதரலிங்கம் யாழ். மத்திய கல்லூரி அதிபர் வே பாலசுந்தரம், யாழ் வேம்படி கல்லூரி அதிபர் திருமதி இராஜரட்ணம் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர், நலன் விரும்பிகள் உட்பட சுமார் 15 பேர் அடங்கிய குழுவொன்று நேற்று யாழ். கோட்டைக்குச் சென்று இராணுவ அதிகாரியைச் சந்தித்தனர்.

குழுவினர் பாடசாலைகளின் நிலைமைகளை எடுத்துக் கூறினர்.

இதற்குப் பதிலளித்த இராணுவ அதிகாரி கோட்டையை நோக்கி தாக்குதல் ஏதாவது மேற்கொள்ளப்பட்டால் மேற்படி இரு பாடசாலைகளின் அதிபர்களுக்கும் அறிவித்துவிட்டு உரிய நடவடிக்கையைத் தாம் மேற்கொள்ள வேண்டி ஏற்படும் என்று தெரிவித்தார். ஆயினும் பாடசாலை நேரத்தில் ஷெல் தாக்குதல் நடாத்த முனையமாட்டோம் என்றும், பாடசாலைகள் ஒழுங்காக நடைபெறதாம் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார். [ச]

## தமிழ்ப் போராளி ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 30ம் திகதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொழுது இரண்டு இராணுவ சிப்பாய்கள் துப்பாக்கிகளுடன் தப்பிச் சென்று பொது மக்களிடம் சரணடைந்தது தெரிந்ததே

இவ்விரு சிப்பாய்களும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கேள்விகளுக்கு பதில் அளித்தார்கள்.

விடுதலைப் புலிகளின் தொலைக் காட்சி சேவையில் இது நேற்றிரவு ஒளிபரப்பானது

இருபத்திரண்டு வயதான இவ்விரு சிப்பாய்களும் தாம் குருநாகலையை பிறப்பிடமாகக் கொண்டதாகவும் தியத்தலாவை இராணுவ முகாமில் தீவிர பயிற்சி பெற்றதாகவும் கூறினர்.

தாம் யாழ். கோட்டை முகாமில் நான்கு மாதங்களும் முல்லைத்தீவு முகாமில் மூன்று மாதங்களும் பின்பு ஆனையிறவு முகாமிலும் பணியாற்றியதாகக் கூறியதுடன் இராணுவ முகாம்களில் பாவிக்கப்படும் நவீன ரக ஆயுதங்களைப் பற்றியும் விரிவாக விபரித்தனர்

இவ்விருவரின் தனிச் சிங்களத்திலான இரு அடையாள அட்டைகளும் புலிகளின் தொலைக்காட்சி சேவையில் காண்பிக்கப்பட்டது. (மா)

## பொலிஸ் பிரிவு ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி பொலிஸ் பிரிவு இயங்கிவந்தது.

அப்பகுதியில் ஏற்பட்ட பதற்ற நிலையில் மேற்படி பொலிஸ் பிரிவுக்கு கடமைக்கு சென்ற சார்ஜன்ட் துரைராஜா, கான்ஸ்டபிள்கள் இராஜவிசுவலிங்கம், சிவபலசுந்தரம் ஆகியோர் வீடு திரும்ப முடியாமல் 7 தினங்களாக அங்கேயே அடைபட்டுக்கிடக்க நேர்ந்ததாக தெரிவிக்கப்பட்டது.

எனவே இப்பொலிஸ் பகுதியிலுள்ள பிரிவை மூடி, அங்கு கடமையாற்றிய பொலிஸாரை யாழ் கோட்டையிலமைதுள்ள காங்கேசன்துறை பொலிஸில் கடமை செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu. P. O. Box 49. Telegram. Eelanadu. Tele phone: 22389—24126.

## தமிழீழ தபால்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சென்று முத்திரை வாங்குவதற்காக நிற்பதனையும் காண முடிகிறது.

தமிழீழம் தபால் சேவை வாகனத்தை அடையாளம் தெரிந்துகொள்ளுகின்றபொது மக்கள் அவ்வாகனத்தை நிறுத்தி முத்திரைகளைப் பெற்றுக் கொள்கின்றனர்

தமிழீழம் முத்திரைகள் ஒட்டப்பட்ட கணிசமானளவு கடிதங்கள் நேற்று தபாற்பெட்டிகளிற் சேர்க்கப்பட்டதாகத் தெரிகிறது. (ச)

## ஜெட் விமானம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் தூண்டுகோலாக இருந்ததென்ற இந்தியப்பிரதமரின் குற்றச்சாட்டை ஹராரேயில் மறுத்துள்ளதுடன் இது போன்ற சம்பவங்களுக்கே பாகிஸ்தான் முன்னர் நடவடிக்கை எடுத்துள்ளதென்றும் கட்டிக்காட்டினர். (வா)

## இரவில் மட்டும் விமான நடமாட்டம்!

[மட்டக்களப்பு நிருபர்]

மட்டக்களப்பு விமான நிலையத்திற்கு இராக் காலங்களில் மட்டும் விமானங்கள் வந்து தரித்துச்செல்வதாகத் தெரிய வந்துள்ளது.

கடந்த 4ம்திகதி மட்டக்களப்பு விமான நிலையத்தில் தரித்துநின்ற அவ்ரோ விமானம் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் தாக்குதல நடத்தியபொழுது அது சேதமடைந்தது தெரிந்ததே

இச்சம்பவத்தைத் தொடர்ந்து இரவு நேரங்களில் மட்டும் அங்கு விமானங்கள தரித்துச்செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (மா)

## மரண அறிவித்தல்

### V நவரத்தினம்

சுண்டிக்குளியைச் சேர்ந்த V. நவரத்தினம் (Maths Lecturer, Jaffna Campus) காலமானார். அன்னார் பாக்கியராணியின் அன்புக் கணவரும், அனித்தா, நிருபினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயன் பிளாஞ்சாட்டின் அன்பு மாமனாரும், ஞானமலர், குணரத்தினம், சகுந்தலமலர் தவரத்தினம், ஜெபரத்தினம், ஜெயரத்தினம், ரேஸ்மலர் ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார். அன்னாரின் இறுதி ஆராதனை 7-9-86 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 00 மணியளவில் அன்னரது இல்லத்தில் கண்டி வீதி, சுண்டிக்குளியில் நடைபெற்று பரியோவான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்: V. குணரத்தினம். (C 4474)

### கணபதிப்பிள்ளை தங்கசாமிப்பிள்ளை

கணபதிப்பிள்ளை தங்கசாமிப்பிள்ளை காலமானார். இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை செல்லம்மாவின் அன்புமகனும், லோகேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவகுமார், நடனகுமார் (ஜேர்மனி), தவக்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலாம்பிகை செல்வநாயகத்தின் அருமைச் சகோதரருமாவார். அன்னாரின் ஈமச்சடங்குகள் (7-9-86) இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 3 00 மணியளவில் வேலணை மேற்கு மயானத்தில் நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(C4484) தகவல்: தி. பாலச்சந்திரன் (சந்திரா)